தென்னிந்திய தொழில் விஞ்ஞானி,

ஜி. டி. நாயுடு

(வரலாறு)

3322



PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

1.7.76
21.7.76

பாகனேரி.

தென்னிந்திய தொழில் விஞ்ஞானி

ஜி. டி. நாயுடு

வரலாறு

★

டி. எம். முத்து

திராவிடமணி பதிப்பகம் தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு ஆகஸ்டு 1949

உட்பொருள்

ஜனனம்	10
தீராத விளையாட்டு	11
எருமைச்சவாரி மணியக்காரர்	12
பிடிவாத தண்டனை	13
திருமணம்	14
கோவை விஜயம்	16
கடமையும் கட்டளையும்	17
குறும்பு வைத்தியம்	19
பஞ்சு லாபம் பம்பாயில்	20
அதிர்ஷ்டம் அழைக்கிறது	21
யு. எம். எஸ். உதயம்	22
புத்திக்குப் புத்தி	25
அமெரிக்கா இறக்குமதி	28
கொடையில் குமணன்	29
கருவில் சிதைந்த கைத்தொழில்கள்	30
யந்திர விஞ்ஞானி	33
கண்டு பிடிப்பாளர்	35
தாவர விஞ்ஞானி	40
அமெரிக்கர் பாராட்டு	42
மேனாடு யாத்திரை	44
2-வது யாத்திரை	48
மூன்ருவது பிரயாணம்	51
கனவும் கொடையும்	57
வாழ்வில் வெறுப்பு	60
வருமானவரித் தொல்லை	60
முதலை வாயில் நாயுடு	62
நீதியைத்தேடி	63

உரிமை பதிவு

விலை 12 அணு

பிழை திருத்தம்
- 61-ம் பக்கம், 15 லட்ச ரூபாய்—5 லட்ச ரூபாய்
- 63-ம் பக்கம், வயது 59—வயது 56

முன்னுரை

தென்னாட்டின் "கலைக்கோயில்" கோவை அவினாசி ரோட்டிலுள்ள 'கோபால் பாக்' பங்களா. கலைச்சிகரம் உயர்திரு ஜி. டி. நாயுடு அவர்கள் :

இருபதாம் நூற்றாண்டில் இந்தியா பெற்றெடுத்த மிகச் சில அரும் புதல்வர்களில் நாயுடு ஓர் பொன்மணி. அதிலும் தென்னாட்டு மக்கள், அமெரிக்காவின் ஹென்றி போர்டையும், எடிசனையும், ஈயூஜின் மேயரையும் ஒன்று சேர்த்த ஏகபிம்பமாய் காட்சி பெறும் நல்வாழ்வு பெற்றவர்கள். மாந்தரில் மாணிக்கம்—அவர் தம் வரலாறு நம் மக்களின் வாழ்க்கைக்கே ஓர் படிப்பினை. எனவே கலங்கரை விளக்கமாய் திசை காட்டும் நாயுடுவை பல்வேறு முனைகளில் நின்று பல்லாயிரம் ஏடுகள் தீட்டலாம்.

ஆனால் திராவிடமணி பதிப்பகத்தின் இச் சிறு நூல், என் சிறு அனுபவத்தில் சிறுமுயற்சியில் உருவமைந்த ஓர் பொதுக்காட்சியே யாகும். நண்பர்கள் என், பெருமாள், இரா. கண்ணனுக்கும் என் நன்றி. குறை மன்னிக்க! குணம் ஏற்கப்படுமென்று மனப்பூர்வமாய் நம்பி இதை மக்களுக்குத் தருகிறேன்.

1—8—49 }
திருச்சி. }

டி. எம். முத்து

சிந்தனைமனிதர் !

கற்றவர்களுக்கு ஒரு புதிர்
கல்லாதவர்களுக்கு ஒரு அதிசயம் !

விடை சொல்ல முடியாத கணக்கு
விவரிக்க முடியாத பின்னல்

ஆழம் காண முடியாத ஆழி
ஆயினும் "அமிர்தம்" இருப்பது நிச்சயம் !
ஆம்—
சிந்தனை செய்ய வேண்டிய மனிதர்தான்
ஜி. டி. நாயுடு

சின்னஅண்ணாமலை,
தமிழ்ப்பண்ணை, சென்னை.

அறிஞர்கள் கூறுகிறார்கள்!

அகில இந்திய தேசியத் திட்ட கமிட்டியை (இதன் தலைவர் பண்டித நேரு) ஆரம்பிக்கும் போது நானும், சர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்களும் அதில் நாயுடு அவர்களே பிரதமஸ்தானம் ஏற்க வேண்டுமென்று விரும்பினோம். நாயுடு இந்த தேசத்தில் எளிதில் காணமுடியாத காரியத்தை, நேரடியாகச் செய்து காட்டக்கூடிய......இஞ்சினியர்.

வி. வி. கிரி.

திரு நாயுடு கூறும் முறைகள், காரியார்த்தமான விடாமுயற்சியையும் எல்லையில்லா அறிவின் ஆழத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார்.

நாம் வியக்கக்கூடிய அளவிற்கு அவ்விடத்தில் அறிவுத்திறன் மலிந்திருப்பதை நான் என்னுடைய கண்களால் காண்கிறேன்......அவர் ஓர் அரிய மனிதர். எதிர் காலத்தை அறியும், திறமையும், சக்தியும் உடையவர். மக்களின் வாழ்க்கைக்கு உதாரணமாய் விளங்கக் கூடியவர்.

சர். சி. வி. ராமன்.

இந்தியாவின் அறிவும், சக்தியும் தெற்கேயிருக்கிறது. ஆனால் செல்வம் மற்ற பாகங்களில் காணப்படுகிறது.

ம. பொ. சிவஞானம்

THE SHIVAJI PRINTING WORKS, TIRUCHI.

பத்திரிகைகள் கூறுகின்றன!

தாமஸ் எடிஸனைப் போல், நாயுடு ஓர் பிறவி மேதை.

—ஸ்வதந்திரா

திரு. நாயுடு சதா எதையேனும் செய்து கொண்டிருப்பவர். அவர் மூளை ஓய்வின்றி வேலை செய்கிறது. இதற்கான சக்தியும், உறுதிப் பாடும் அவரிடம் ஏராளமிருக்கின்றன.

—ஓரியண்ட் வீக்லி

மிகப் பெரிய இருதயத்துடன் சாதாரண மனிதராய்க் காணப்படு பவர். அவர் ஒரு கண்டு பிடிப்பாளர்-மேதை.

—சண்டே டைம்ஸ்

நாயுடு இந்தியாவின் போர்டு-எடிஸன் இணைப்புப் பிறவி... அவரின் கழிம்பேறிய கரங்கள் எதையோ ஒன்றைச் செய்துகொண்டேயிருக் கின்றன.

—ப்ரீ இந்தியா

இரவும், பகலும்... வாலிபனைப்போல் உழைப்பவர்.. துணுக்காகப் பேசுவார்; துடுக்காகவும் பேசுவார். உற்சாகத்துடன் தன் வாழ் நாட்களை உண்மை தழுவி நடத்துபவர்.

—நாரதர்

அவரை (நாயுடுவை) ஒரு யந்திர மனிதன் என்றே கூறிவிடலாம். யந்திரங்களின் நுட்பங்களை மிக அறிந்திருக்கிறார்.

—ஈழகேசரி

நல்ல அறிவாளி. தொழில் நிபுணர்.

—காண்டிபம்

விஞ்ஞான வளர்ச்சியையே வாழ்க்கைத் தத்துவமாகக்கொண்டு நடப்பவர்.

—சிவாஜி

தென்னிந்திய தொழில்-விஞ்ஞானி

ஜி. டி. நாயுடு

'வீட்டுக்குதவா பிள்ளை நாட்டுக்குதவும்' என்பது ஓர் பொது நீதி போலும்!

இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை அமைக்கக் காரணமாயிருந்த ராபர்ட் கிளைவ் ஒரு படுசுட்டி—பொல்லாத பிள்ளை.

இருபதாம் நூற்றாண்டில், உலகத்தையே யுத்தத்தில் இழுத்துவிட்டது கொல்லன் மகன் முஸோலினியும், வர்ணக்காரன் அடோல்ப் ஹிட்லரும்தான். ஏன், இன்னும் அமெரிக்க மோட்டார் மன்னர் ஹென்றி போர்டும் ஏனைய தொழில் விற்பன்னர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான். பள்ளிப் பருவத்தில் புள்ளிக்குதவாத இப்படிப் பட்டவர்களே பிறகு பாரை ஆண்டார்கள். உலகமக்களை தங்கள் அடிமை கொண்டனர்.

தென்னிந்திய தொழில் விஞ்ஞானி — ஆராய்ச்சி அரசன்—மோட்டார் மன்னர் உயர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களும் இப்படிப்பட்ட அபூர்வ பிறவிகளைச் சேர்ந்தவர். ஒரு நூற்றாண்டு காலத்தில் ஓர் தேசம் பெற்றுப் பூரிக்கும்

மிகச் சிலரில் நாயுடுவும் ஒருவர். அமெரிக்க நாட்டின் சரித்திரத்தில் விஞ்ஞானி எடிசன் என்றும் நிலையாய இடம் பெற்ருர். இந்திய நாட்டின், இருபதாம் நூற்ருண்டு சரிதம் பாரபட்சமற்ற சரித்திராசிரியர்களால் எழுதப்பெற்ருல் நாயுடுவின் திருநாமம் நிச்சயம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை.

ஜனனம்.

திரு. நாயுடு 1893-ம் ஆண்டு கோயமுத்தூரையடுத்த கலங்கல் என்ற குக்கிராமத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் கோபால்சாமி நாயுடு என்பதாகும். பிறந்த ஓர் ஆண்டுக்குள்ளாகவே தாயைப் பறிகொடுத்தார். எனவே தாயற்ற பாலகனை நாயுடு தன் மாமன் பாதுகாப்பிலும், போஷணையிலும் இருக்கவேண்டியவராஞர். கோவைக்கு பதினன்கு மைல் தென்கிழக்கேயுள்ள லட்சுமி நாயக்கன் பாளையம் என்பதே இப் 'புண்ணிய பூமி'. மாமன் பெயர் ராமசாமி நாயுடு.

நான்கு வயது நிரம்பிய நாயுடு அக்கிராமத்திலுள்ள திண்ணைப் பள்ளிக்கு அனுப்பட்டார். மெலிந்த உடலும், கூரிய கண்களும் அசாதரணமான மண்டைப் பருமனும் தோற்றமாய் அமையப்பெற்ற அந்தச் சிறுவனுக்குப் பள்ளிப் படிப்பில் அவ்வளவாக புத்தி செல்லவில்லை. அதிலும் பிற்கால விஞ்ஞானப் பிறவிக்கு பரப்பிய மணலில் பச்சிளம் விரல்களை எழுத்தாணியாகக் கொண்டு, 'அ'வும் 'ஆ'வும் எழுத முடியுமா? பள்ளிப் படிப்பு வேப்பங்காயாகவே ஒரு நாள் வாத்தியார் கண்களில் மண்ணை வாரி வீசினுர். அதனுல் அந்தத் திண்ணைப்பள்ளி மட்டுமில்லாமல், அந்த லெட்சுமி நாய்க்கன்பாளையமே சிறுவன் துரைசாமிக்கு விடுதலை தந்துவிட்டது.

இந்தச் சமயம் எட்டு வயதைத் தாண்டிய துஷ்டச் சிறுவன் ஜனன பூமியான கலங்கலுக்கே தன் தந்தையிடம்

வந்து சேர்ந்தான். கோபால்சாமி நாயுடு ஓர் சிறு கிராம வியாபாரி. அதோடு கொஞ்சம் வீடு, வாசல், தோட்டங்களை யுடையவர். தானியங்களும், முக்கியமாக புகையிலையும் பருத்தியும் அவரின் சாகுபடிப் பொருள்கள். வாத்தியார் கண்களில் மண்ணை வாரி வீசி வாழ்க்கையை மாற்றிக் கொண்ட துரைசாமி, தந்தையாரால் கிராமத்திற்கு சிறிது தொலைவிலுள்ள சொந்தத் தோட்டத்தின் காவலனுக்கப் பட்டான். மண் வெட்டுவதும், மாடு மேய்ப்பதும் இதனுடன் இணைப்புப்பணி. ஆனால் அலங்கோல களியாட்டங்களும், மனம்போன போக்குக்கு இயற்கைச் செயல்களும் மலிந்திருந்தன. ஏதோ அச்சுப் புத்தகம்—கிடைத்ததை எல்லாம் படித்துப் பார்த்து விடுவதென்ற முயற்சியில் நல்ல எழுத்தறிவுப் பயிற்சி ஆசானின்றியே அச்சிறுவனிடம் அருவிப் பூத்துக்கொண்டிருந்தது.

தீராத விளையாட்டு.

தீபாவளி சமயம். அந்நாளில் இப்பண்டிகை பிரமாதமான கிராமக் களியாட்டமல்லவா? கோபால்சாமி நாயுடு கொல்லைக் காவலனுயுள்ள தன் குமாரன் துரைசாமியை ஓர் நாள் வீட்டிற்கு அழைத்துவரச் சொன்னார். துர்ப்பாக்கியச் சிறுவனுக்கு இதுவும், கொடுத்து வைக்கவேண்டாமா? தகப்பனார் அனுப்பிய வேலையாட்களுடன் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கையிலேயே அந்தப் பொல்லாத தீபாவளி அவசரப்பட்டுக்கொண்டு கொஞ்சம் முன்வந்து விட்டது. வழியே சாலையில் சென்றுகொண்டிருந்த வைக்கோல் வண்டி ஒன்றில் துரைசாமி தீ வைக்கவே சிறிது நேரத்தில் வண்டியும் உட்பட பூராவுமே பெருநெருப்பாகி, கிராம மக்கள் அனைவருக்குமே பெரிய தீபாவளி ஒன்று காட்சி தந்துவிட்டது. தகப்பனார் மனம் புண்ணாக, உடனே மீண்டும் அத்தோட்டத்திற்கே அழைத்துச் செல்ல உத்திரவிட்டார். அதுமட்டுமல்ல; கொல்லைக் காவலை விட்டு பகல் இரவு எந்த நேரத்தும்

கலங்கல் வீட்டை கண்ணால் பார்க்கக் கூடாதென்பதும் கடின காவல்! இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்ற தந்தை ஏதும் புரியாமல் திண்டாடியதில் தவறென்ன? பிறகு ஒன்பது வருடம் தோட்டமும் துரைசாமியும் கூண்டும் பறவையும் போல் நாட்கள் பல பறந்தன.

ஆனால் எந்தத் தண்டனைக்கும் காலப்போக்கில் கருணை யுண்டல்லவா? இரண்டொரு ஆண்கட்குப் பிறகு துரை சாமிக்கும், தந்தையாரின் கருணை கிட்டிற்று. அதனால் தோட்டத்திலிருந்து அவசியமானபோது வீட்டிற்கு வர லாம். வீட்டிலிருந்து தோட்டத்திற்குப் போகலாம்.

எருமைச் சவாரி மணியக்காரர்!

இந்தச் சமயம் துரைசாமி மணியக்காரராக வேலை பார்க்கும் மற்றொரு அபூர்வ சம்பவமும் ஏற்பட்டது. அதாவது அந்தக்கால முறைப்படி கிராமத் தலைவர் இரண் டொரு நாட்கள் வெளியூர் செல்லுவதாயிருந்தால், தங் களுக்கு நம்பிக்கையான யார் பெயருக்கேனும் தங்கள் வேலையை எழுதிவைத்துவிட்டுப் போகவேண்டும். இதன் படி கலங்கல் மணியக்காரர், துரைசாமியை தன் வார்சாக நியமித்துவிட்டு வெளியூர் சென்றிருந்தார். இந்த நிலையில் தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் சிஷ்யகோடி சகிதம் ஏதோ ஓர் எதிர்பாராத அவசர வேலையாய் கலங்கலுக்கு வரவேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது. தாசில்தார் சாலையில் எதிர் வர, துரைசாமி அப்போதுதான் தோட் டத்திலிருந்த எருமை மாட்டை வீட்டிற்கு ஓட்டி வந்து பால் கறந்தவுடன் வழக்கப்படி தோட்டத்திற்கு திருப்பி ஓட்டிக்கொண்டல்ல—அதன்மேல் ஏறி சவாரி செய்தவண் ணம் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தான். தாசில் தாரும், ஏனையோரும் 'கலியுக எம தர்மன்' என்று நினைத் துக்கொண்டோ என்னவோ, கலங்கல் சென்று மணியக் காரரை விசாரித்தனர். அங்குள்ளோர் அழைத்து வருகிறோம் என்று சொல்லி கோபால்சாமி நாயுடு

வின் தோட்டத்துக்கு ஓடி துரைசாமியை அழைத்து வந்தனர். தாசில்தாருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ற லும் சந்தேகம் தீர 'சற்றுமுன் சாலையில் எருமைச் சவாரி செய்தது........!' என்றார் துரைசாமி ஏன் பயப்படவேண் டும்? அதுதான் சுபாபமில்லையே! ஆம் என்று பெருமிதத் துடன் பதிலளித்தான் இந்த 'எருமை மணியக்காரன்.'

பிடிவாத தண்டனை

எதிர்கால சுதந்திரப் பிறவிக்கு அன்று கிடைத்த இந்த சிறு சுதந்திரம், இதுபோன்ற பயமறியா பல பருவக் குறும்புகளாக மாறிக்கொண்டிருந்தது. என்றாலும் 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்; நயத்தக்க, நாகரீகம் வேண்டுபவர்' என்ற பொய்யாமொழியையொட்டி தன் நிலை ஒருப்படல் என்ற அருங்குணம் அச்சிறுவனை அணைத் திருந்தன. உதாரணமாக துரைசாமி ஓர் நாள் மற்றொரு வனை துரத்தி ஓடி அவன் இல்லம்புக; ஆங்காங்குள்ள ஊஞ்சல் இரும்புக் கம்பிகளில் மோதி சுழற்றிச் சுத்தி அகப்பட்டுக் கொண்டான். விடுதலைபெற பிறர் உதவி யின்றி மார்க்கமில்லை. எனவே தான் துரத்திய நண்பனையே விடுதலை வேண்டினான். அவன் சில நிபந்தனை விதித்தான். அதாவது அடுத்த இரண்டு வருட காலத்திற்கு தன்னை துரைசாமி துஷ்டத்தனமாய் துரத்துவதில்லை என்றும், தான் அடித்து உதைத்தாலும் எதிர்க்காமல் பட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினான். மேலும் ஓர் கடைசி முயற்சி; துரைசாமி பார்த்துவிட்டு நிபந்தனையை கனைப்புடன் ஒப் புக்கொண்டான். நண்பன் தளை நீக்கி விடுதலை தரவே வெளியேறினான். ஆனால் சாதாரண நம் சிறுவர்களைப் போல் விடுதலை பெற்றதும், நிபந்தனையை பழிக்கவில்லை. பதில் சண்டைக்கும் ஆயத்தம் செய்யவில்லை. அஞ்சாமல் ஏற்று, குறிப்பிட்ட காலம்வரை அந்த நண்பன் தன்னை அடித்து உதைப்பினும் பெற்றுக்கொண்டிருந்தான். கலங் கல் கிராமமே திகைத்தது என்னே சிறுவனின் சபதம் என்று! ஆனால் அந்த நண்பன் இரண்டாம் ஆண்டு இறுதி

நாளில் துரைசாமியிடம் புலிக்கு முன் பூனையானன். இது போல் எண்ணற்ற எடுத்துக்காட்டுடன் விளங்கினன் இந்த 'தீராத விளையாட்டுப் பிள்ளை!'.

திருமணம்

இந்த நிலையில் ஒரு நாள் அமெரிக்காவிலுள்ள பார்க் டேவிஸ் கம்பெனியார் தயாரிப்பான (Pain Killer) தலைவலி மருந்தின் காலிப் புட்டி ஒன்று துரைசாமியின் கண்ணில் பட்டது. உடனே அதன்மேலுள்ள எழுத்துக்களையும், விலாச விபரங்களையும் கூர்மையாகப் படித்தான். ஆனாலும் அந்தப் பட்டிக்காட்டுச் சிறுவனுக்கு அமெரிக்காவுக்கு கடிதம் எழுதி அந்த மருந்தை தருவிப்பதற்கான முறைகள் தெரியவேண்டாமா? அதற்காக அந்த ஊர் வட்டாரங்களுக்கு அடிக்கடி வந்து போகும் ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒருவரை நட்பேற்படுத்திக்கொண்டு ஆங்கிலத்தில் கடிதம் எழுதினன். சில நாட்களில் மருந்தும் வந்து சேர்ந்தது. பட்டிக்காட்டுப் பாமரர்களின் பரீட்சையில் அது வெற்றிகரமானதாகிவிடவே துரைசாமி இந்த மருந்து வியாபாரத்தைத் தொடர்ந்து, கடிகாரம், ஹார்மோனியம் போன்ற வேறு சில சாமான்களையும் தருவித்து வியாபாரம் நடத்த ஆரம்பித்தான். நல்ல வருமானமுங்கூட. இந்த நிலையிலும் அந்த வாலிபன் தனது கொள்கைகளையும், பிறர் தொண்டுகளையும் விட்டு விடுவதில்லை. வியாபாரத்திற்கிடையே அந்தக் கிராமத்தில் விபசார ஒழிப்பு—ஏழைக் குடியானவர்களின் கூலி உயர்வுபோன்ற துறைகளிலும் தலைமை தாங்கி கவனஞ் செலுத்தி வந்தான். நாளடைவில் கலங்கல் கிராமத்தில் யாரும் அஞ்சும்படியான ஓர் படைத் தளபதியாகவும் ஆனல் நீதி—நேர்மைக்கு பெரிதும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவனுகவும் விளங்கினன். தாயற்ற துரைசாமியின் இந்தக் காளைப் பருவக் காட்சி தந்தை கோபால்சாமி நாயுடுவை கலியாணக் கடமையை தனயனுக்குச் செய்யத் தூண்டிற்று. எனவே கிராமப் பெண்ணுன திருமதி செல்லம்மாள் மேதை

யின் கரம்பற்றினார். ஆனால் ஒரு வேடிக்கை புரோகித தடபுடல் சடங்குகள் எதுவுமேயின்றி துரைசாமி புதுவாழ்வு பெற்றார். காரணம், கலங்கல் தோட்ட வாழ்வில் தனக்குத்தானே ஆசானாய் கண்டு கேட்டு பலவித பண்டைத் தமிழ் நூல்களையும் அவர் பகுத்தறிவு கொண்டு படித்துத் தெளிந்திருந்தார். 'இலக்கணம் துரைசாமி' 'வைத்திய துரை' போன்ற பலபட்டப்பெயர்களும் சூழ்ந்தது போகர் ஏழாயிரம், அரசன் ஷண்முகனார் எழுதிய தொல் காப்பியப்பாயிர விருத்தி போன்ற தமிழ் நூல்கள் அன்று மண்ணை வீசிய மாணவனின் இன்றைய மனப்பாடங்களாய் தழைத்திருந்தன. சென்னை ராஜதானி சரித்திரத்துக்கு ஒரு பாட்டும், பதார்த்த குணசிந்தாமணிக்கு ஒரு பதில் கவியும் துரைசாமிக்கு இப்போது சாதாரணம்.

வயது சுமார் இருபதிருக்கும். என்றாலும் கிராம வாழ்க்கையிலேயே ஊறித்திளைத்திருந்த வாலிபரானபடி யால் கோவைக்கு வரவோ, ஆங்கிலேயன் யாரையேனும் பார்க்கவோ சந்தர்ப்பங்களில்லாமலிருந்து வந்தது. இந்த நிலையில் அப்பகுதிக்கு லங்காஷயர் என்ற வெள்ளையர் ஒரு வர் நில செட்டில்மெண்ட் அதிகாரி மோட்டார்சைக்கிளில் வந்தார். துரைசாமியின் வாழ்க்கையை அங்கு தொடங் கவோ என்னவோ, அந்த மோட்டார்சைக்கிள் ரிப்பேராகி ஓட மறுத்துவிட்டது. வேடிக்கை பார்க்க சூழ்ந்திருந்த சிறுவர்களில் துரைசாமியும் நின்றுகொண்டிருந்தார். கொஞ்சம் மண்ணெண்ணையும், துணியும் வேண்டினார் அந்த (வெள்ளை குஷ்டரோகி.) அதுரிப்பேர் செய்யப்பட்டு மீண்டும் ஓடுவதைப் பார்க்கத் துடித்துக்கொண்டிருந்த துரைசாமி ஓடிப்போய் சிறிது மண்ணெண்ணை, துணி கொண்டுவந்துகொடுத்தார். அந்த ஆபீசர் எதையோ கழட் டித்துடைத்து சற்று நேரத்தில் அதை ஓடவைத்துவிட் டார். லங்காஷயர் சிரித்துக்கொண்டே அதில் ஏறிப்புறப் பட்டுவிட்டாராலும், துரைசாமிக்கு மட்டும் கண்மறை

கிறவுரை அந்த நூதன யந்திரத்தைப் பற்றிய ஆச்சர்யம் தீர்ந்தபாடில்லை. அதோடு, உடலில் மூன்றில் ஒருபாகம் வெண்குஷ்டம் பரவினாலே நடமாட முடியாதென்று வைத்திய நூல்கள் கூறுகின்றபோது, முழுவதும் வெண்குஷ்டம் பரவிய இந்த மனிதன் எப்படி நடமாடுகிறான் என்பதும் புதிராயிருந்தது. எப்படியோ ஒருநாள் அந்த ஆசாமியைச் சந்தித்து அந்த மோட்டார் சைகிளை வாங்கியாக வேண்டுமென்றும், அதன் பாகங்களைத் தனித்தனியாக பிரித்துப் பார்த்து எப்படி ஓடுகிறதென்பதைக் கண்டறிய வேண்டுமென்னும் ஆர்வம் மனதில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது.

கோவை விஜயம்

எனவே இதுவும், பிற சந்தர்ப்பங்களும் துரைசாமியை ஒரு நாள் 12 மைல் அருகாமையிலுள்ள தலைநகர் (கோவை)க்குப் புறப்படச் செய்துவிட்டது. நாட்டுப்புற வாலிபன் நகரை எட்டிப் பார்க்கையிலேயே மற்றொரு ஆச்சரியம்! ரயில்வண்டியும், எஞ்சினும் கண்ணில் பட்டது. மாடு இல்லாமல் இப்படி ஓர் சாதனம் வேகமாய் உருண்டோடுவதும் மற்றொரு புரட்சி. இப்படி உலகை விழித்த கண்களுக்கு அற்புதமும்—ஆச்சரியமும் மாறி மாறித் தோன்றவே நகர வாழ்வு துரைசாமியை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. கையில் தம்பிடி இல்லாவிட்டாலென்ன? திட சித்தம் படைத்தவர்கள் லட்சியத்திற்காக எதற்கும் துணியக் கூடுமல்லவா? துரைசாமி தன்னை மூன்று ரூபாய் மாதச் சம்பளத்திற்கு ஒரு சிறிய ஓட்டலில் பணியாளனாய் ஒப்படைத்துக் கொண்டார். அன்றாட வயிற்றுக் கொடுமை தீர்வதற்கும், அந்த வெள்ளை மனிதர் லங்கா ஷயரின் மோட்டார் சைக்கிளை வாங்குவதற்கும் காலம் செல்வதுவரை பொருத்திருந்தார். சம்பளமும், பிற சேமிப்பும் நானூறு ரூபாய் வரை சேரவே அந்த ஆங்கிலேய ஆபீசரின் இருப்பிட விலாச மறிந்து போய் அதை விலைக்கு வாங்கினார். இந்தக்கால வாலிபர்களைப்

போல் அதன்மீது ஏறிச் சவாரி செய்யவேண்டுமென்ற எண்ணத்திற்கு மாறுய் தன்னிஷ்டத்திற்கு அதைப் பிரித்துப் பார்த்துப் பூட்டி சரி செய்யவேண்டுமென்ற ஆர்வத்தில் விளையாட்டு சாமானைப் போல பாவித்து பிரிப்பதும், பூட்டுவதுமாகயிருந்து அதிலுள்ள பல நுணுக்கங்களை தனக்குத்தானே கற்றுக்கொண்டார். எதிர்கால தொழில் மேதைக்கு இந்த வாழ்வும் வேலையும் எத்தனை நாளைக்கு நீடிக்கும்? சில நூறு ரூபாய்கள் நண்பர்கள் கடன் உதவியுடன் கோவையில் சாதாரணமான பஞ்சு வர்த்தகத் தொழிலை தொடங்குவதென்று தீர்மானித்தார். சூதாட்டத்தை ஒத்திருந்த அந்தத் தொழில் பஞ்சைத் துரைசாமியைச் சோதனை செய்துவிட்டது. சில மாதங்களில் சொற்ப கை முதலும் கையை விட்டோடிவிட்டது. இந்நிலையில் என்ன செய்யலாம்?

கடமையும் கட்டளையும்!

கொஞ்சமும் முன்பின் யோசியாமல் கோவையையடுத்த ஒண்டிப் புதூரில் ஜின்னிங் பாக்டரியில் வேலைக்குச் சேர்ந்துவிடுவதென்று துணிந்தார் துரைசாமி. அந்த பாக்டரி முதலாளியோ கர்ண கடூரமான பேர்வழி. அவரிடம் யாரும் நீண்ட நாளைக்கு வேலைக்கிருக்க முடியாதென்பது பொது வசனம். என்றாலும் துரைசாமிக்கு இதெல்லாம் என்ன பிரமாதம்? இரண்டு வருடங்கள் வாக்குறுதி நிமித்தம் அடியும், உதையும் பட்டு சகித்திருக்கையில்! அப்படிப்பட்டவரிடத்தில் இருந்து வருகிறேன் பார் என்று சபதம் செய்துகொண்டு இரண்டு வருட காலம் துரைசாமி வேலை பார்த்தார். நிச்சயப்படுத்திக்கொண்ட காலத்திற்குப் பிறகு ஒரு நாள் அதிகமாயிருக்கவும் விரும்பவில்லை. அதனல் ஒரு நாள் நள்ளிரவு பதினேருமணியிருக்கும். ஜின்னிங் பாக்டரி முதலாளி கோவை அவினுசி ரோட்டிலுள்ள ஓர் இடத்தில் காரை நிறுத்திவிட்டு மற்றொருவ

ரிடம் பேசிக்கொண்டிருந்தார். துரைசாமி திடீரென்று பேசிக்கொண்டிருந்த முதலாளிமுன் போய் நின்று சாவியை நீட்டினர். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன சமாச்சாரம் என்று கேட்க நான் தங்களிடம் வேலை ஒப்புக்கொண்டிருக்கிறபோது என்ன உறுதிமொழி தெரிவித்துக்கொண்டேனே அதன்படி இன்று இந்த நேரத்தோடு இரண்டாண்டு முடிகிறது; இனிமேல் இருக்க முடியாது என்று சொல்லியபடியே புறப்பட்டுவிட்டார். முதலாளி என்ன முயன்றும் இறுதிவரை பயனில்லை.

ஆனல் உறுதிமொழியில் உள்ள கடமைப்பாடு போன்று முதலாளிக்கு ஊழியம் புரிவதிலும் துரைசாமி கடமை—கட்டளை என்பவைகளிலிருந்து சிறிதும் தவற வில்லை. தந்தை கோபால்சாமி நாயுடுவினிடமே இ... பரீட்சை ஒரு சமயம் நடந்துவிட்டது. அதாவது கோபால்சாமி நாயுடு தனயன் வேலை பார்க்கும் அந்த ஜின்னிங் பாக்டரி முதலாளியிடம் வாடிக்கைப் பஞ்சு வியாபாரி. துரைசாமியோ பிரதம நிர்வாகி. கோபால்சாமி நாயுடுவின் பருத்தியை துரைசாமியே ஒரு நாள் இருந்து நிறுவை செய்யவேண்டியதேற்பட்டது. நிறுவையில் யாராயிருந்தாலும் பாரத்துக்கு ஐந்து ராத்தல் தள்ளி அடிக்க வேண்டுமென்பது எஜமான் கட்டளை. துரைசாமி எடையில் வியாபார சாதுர்யங்களை அனுஷ்டித்து கோபால்சாமி நாயுடுவிடமும் மாமூலைச் செய்தார். தந்தைக்கு ஆத்திரம் வந்துவிட்டது. என்னடா இது அக்ரமம்? எனக்குமா... ......!? என்றார். 'ஆம்! உங்களுக்கு இனி பாரத்துக்கு 10 ராத்தல்' என்று பதிலளித்தார் துரைசாமி. முதலாளியிடம் கோபால்சாமி நாயுடு முறையிட துரைசாமி செய்வதில் குறுக்கிட முடியாது—சரி என்று கூறிவிட்டார். தந்தையானலும், தனயனானலும் கடமை கடமைதான்—கட்டளை கட்டளைதான்!.

குறும்பு வைத்தியம்

ஆனால் இந்தச் சமயத்திலும் துரைசாமி தீராத விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்தார். தன்னுடைய பொறுப்பும், பதவியும் என்னதானிருந்தாலும் ரசிப்பதில் அவருக்கு ஓர் அலாதி ஆனந்தம். ஜின்னிங் பாக்டரி மானேஜர் வேலைக்கு மத்தியில் தனது வைத்தியப்படிப்பு திருவிளையாடல் போலும்! அங்கு தனது தந்தையைப்போலவே அடிக்கடி வியாபார விஷயமாய் வந்துபோகும் தன் மாமன் ஒருவரிடம் (திருப்பூர், எல். ஆர். ஜி. நாயுடு அவர்களின் உறவினர்) ஒரு நாள் அனுபானம் ஆரம்பித்தார். அதாவது அவருடைய வாய் சதா நாற்றமெடுத்துக் கொண்டிருக்கும். அருகிலிருந்து பேசுவோருக்கு சகிப்பதற்கில்லாத கஷ்டமாகவும், தொல்லையாகவுமிருந்தது. துரைசாமிக்கும் மகா வேதனை. அவரிடம், வாய் நாற்றம் தீர மருந்து சாப்பிடுகிறீர்களா? என்று கேட்டுக்கொண்டார். அவரும் சரி என்று சொல்லவே சற்று நேரம் வெளியே போய் வருவதாய்ச் சொல்லி அருகிலுள்ள ரயில் கரைப்பக்கம் சென்று ஒரே மாதிரி சந்தேகப்பட முடியாத ஆட்டுப் புழுக்கைகளை பொறுக்கினார். அழகான காலி பாட்டில் ஒன்றில் போட்டு கொடுத்துவிட்டார். ஒரு நாளைக்கு ஒரு வேளை மருந்து–அதோடு பத்தியமும் கூறப்பட்டது.

துரைசாமியிடம் இப்படி ஒரு மருந்து பாட்டிலை காசில்லாமல் வாங்கிச் சென்ற களிப்போ என்னவோ, வைத்தியர் நிபந்தனைப்படி நோயாளி மருந்து சாப்பிட்டு முடித்தார். வியாபார நிமித்தம் சில நாள் சென்று பாக்டரிக்கு வந்து அவர் துரைசாமியைப் பார்க்க 'குணம் எப்படி' என்றார் மாரீச வைத்தியர். 'ஒன்றும் அவ்வளவாய் தெரியவில்லை மற்றொரு பாட்டில் நல்ல மருந்தாயிருந்தால் கொடு பார்க்கலாம்' என்றார் அந்த உண்மை கஷ்டவாளி. மறுபடியும் முன்போலவே துரைசாமி வெளியே சென்று அறுபது மாத்திரைகள் (ஆட்டுப்புழுக்கைகள்தான்!)

தயாரித்து வந்து கையில் கொடுத்து 'இது முன்னிலும் கொஞ்சம் முரட்டு மருந்து-பத்தியம் ஆகார வகைகளையே அதிகம் குறைத்துக்கொள்ள வேண்டும்'என்று மேலும் நிபந்தனை போட்டார். நம்பிக்கையோ, அல்லது அஜீர்ணக் கோளாறு தீர்க்கப்பட்ட காரணமோ என்னவோ அவருடைய வாய் நாற்றம் குணமடைந்து விட்டது. மீண்டும் வைத்தியரைச் சந்தித்து மட்டற்ற தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார் வியாதிஸ்தர். ஆனால் பிறகு அகஸ்மாத்தாக உண்மையறிய நேர்ந்தவுடன் துரைசாமியைக் கடிந்து கொண்டார் அந்த பெரிய மனிதர். ஆனால் துரைசாமியோ ஏளனச் சிரிப்புச் சிரித்தபடியே 'ஏதானால் உனக்கென்ன? நோய் தீர்ந்து விட்டதல்லவா?' என்று மேலும் கொல்லென்று சிரித்து விட்டார். வெளிவேஷ மோகமும், பிடிவாத நம்பிக்கையும் என்னவென்பதை தெரிந்துகொண்டார் இதன் மூலம் துரைசாமி.

பஞ்சு லாபம் பம்பாயில்....?

ஒண்டிப்புதூர் அனுபவம் துரைசாமியை திருப்பூரில் ஒரு ஜின்னிங் பாக்டரியை சொந்தத்தில் ஆரம்பிக்கபெரும் உதவி செய்தது. இதிலும் மற்றொரு புரட்சி. அந்தக்காலங்களில் கிருஸ்துவ பாதிரி மார்களுக்குச் சொந்தமான இடங்களில் இந்துக்கள் யாரும் குடிபுகுவதில்லை. பாவம் என்பது சித்தாந்தம். ஆனால் துரைசாமி திருப்பூரில் மிஷினெரிக்குச் சொந்தமான காலி இடமொன்றையே மலிவான வாடகைக்குப் பிடித்து அதில் கூரைபோட்டு தொழிற்சாலையைக் கட்டத் தொடங்கிவிட்டார். எதற்கெடுத்தாலும் முனிசிபாலிட்டி அனுமதி வேண்டுமல்லவா? துரைசாமி சட்டரீதியான முன் அனுமதி பெறுமலேயே கட்டிடம் ஆரம்பிக்க நகரசபை அதிகாரிகள் பிராசிகியூஷன் நோட்டீஸ் பிறப்பித்து விட்டனர். நோட்டீஸ் சார்வு செய்ய கட்டிடம் கட்டுபவர் அகப்படவேண்டாமா? பக

லெல்லாம் கோயமுத்தூரில்—இரவெல்லாம் திருப்பூரில் என்றிருந்தால் துரைசாமி எங்கே அவர்கள் கண்ணுக்கு அகப்படப் போகிறார்? கட்டிடம் ஒருவாறு கட்டிமுடிந்ததும், இனிமேல் நகரசபையார் இடித்துவிட முடியாது என்ற தைரியத்தில் அந்நாளில் திருப்பூரில் சேர்மனாயிருந்து வந்த வித்தல் தாஸ் என்பவரிடம் தானே நேரில் சென்று அனுமதி பெற்றுக்கொண்டார். ஒண்டிப் புதூர் வெளியேற்றம்—திருப்பூர் ஜின்னிங் பாக்டரி ஆரம்பம் - சென்ற உலக மகாயுத்த முடிவு இந்தச் சந்தர்ப்பங்களெல்லாம் இரண்டொரு வருடங்களில் துரைசாமியை ஒண்ணரை லட்சத்திற்கு அதிபதியாக்கிவிட்டது.

சாதாரண மனப்பான்மை மட்டுமில்லை; உச்சி ஏறிப் பார்க்கவேண்டுமென்ற வாலிபருக்கு கையில் இப்படி பல ஆயிரம் ரூபாய்களிருந்தால் சும்மாயிருக்கச் சொல்லுமா? வடநாடு சென்று வர்த்தகம் நடத்தினால் இன்னும் பல லட்சம் கிடைக்குமென்று கருதி பம்பாய்க்குச் சென்று பஞ்சு வர்த்தகம் நடத்தவே கை முதல் ஒண்ணரை லட்சம் பஞ்சாய் பறந்தது. நிராதரவாய் கோவைக்கே திரும்ப வேண்டியவராகிவிட்டார். இந்தச் சமயம் தனயன் நிலையுணர்ந்த தந்தை கோபால்சாமி நாயுடு, துரைசாமியை கலங்கலுக்கு வந்துவிடும்படி அழைத்தார். எதிர் காலத்தைப் பற்றிய திடநம்பிக்கையில் மறுத்துவிட்டார். கலங்கல் வாலிபருக்கு என்னே கலக்கமான வாழ்வு!

அதிர்ஷ்டம் அழைக்கிறது!

கோவையில் மீண்டும் பஞ்சுத் தொழில் நடத்த ஆதரவில்லை. நண்பர்கள் விரும்பவில்லை. சரி மீண்டும் தொழிலாளி என்று ஊசலாடிக் கொண்டிருந்த சமயம் ஒரு நாள் கோவையிலிருந்த ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற வெள்ளைக்காரரிடம் சென்று, அவரின் மோட்டார் தொழிற்சாலையில் தனக்கு ஒரு மெக்கானிக்கல் வேலை கொடுத்து

ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார். பஞ்சு வர்த்தகர் துரைசாமியையும், அவரின் நாணய நேர்மையையும் யந்திர நுட்ப புத்தியையும் பற்றி அதற்கு முன் அறிய நேர்ந்திருந்த ஸ்டேன்ஸ், தனக்குக் கீழ் வேலைக்கமர்த்திக் கொள்ளப் பிரியப்படாமல் ஓர் மோட்டார் வண்டி வாங்கி வாடகை பஸ் ஓட்டும்படியும், அதற்காக வேண்டுமானால் தான் ஒரு நாலாயிரம் ரூபாய் கடன் கொடுத்துதவுவதாகவும் கூறினார். துரைசாமி மேலும் ஒரு நாலாயிரம் ரூபாய் கடனாகப் பெற்று சில நாட்களில் மோட்டார் பஸ் ஒன்றை வாங்கினார். ஸ்டேன்ஸ் துரை உதவி, ஒரு மோட்டார் பஸ் கிடைத்தது போல, காலஞ்சென்ற கோவைப் பிரமுகர் திவான் பகதூர் சோமசுந்தரம் செட்டியார் 'குருமந்திரம்' எந்தத் தொழிலாயிருந்தாலும் பாதியை முதலுக்குப் போட்டுவிட்டு, மற்றொரு பாதியை அந்த முதல் பாதுகாப்புக்காக கையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது. இதன்படி துரைசாமி நாயுடுவின் நிரந்தரமான தொழில் வளர்ச்சி 1920-ம் ஆண்டில் நிச்சயமாய் ஆரம்பித்து விட்டது. பழனிக்கும், பொள்ளாச்சிக்கும் இடையே சுமார் 40 மைல்கள். இதில்தான் துரைசாமியின் முதல் பஸ் கம்பீரமாய் தன் சக்கரங்களைச் சுழற்றிற்று. டிரைவர் யார்? சாட்சாத் துரைசாமிதான். முதலாளி—டிரைவர் என்ற இரண்டு உரிமைகளும் தனக்கேயிருந்தாலும் 2 வாழைப்பழம் அரைக்கால் படி பால்தான் துரைசாமியின் ஜாம உணவு. 'ஐந்தணா செலவில் அன்று என் வாழ்நாட்கள் சென்றன' என்கிறார் இப்போது "கோபால்பாக்" வாசி உயர்திரு ஜி. டி. நாயுடு.

யு. எம். எஸ். உதயம்

1920 முதல் 1930-ம் வருடம் வரை சுமார் பத்து வருடங்கள். ஜி. டி. நாயுடுவின் மோட்டார் தொழில் வெகு துரிதமாய் வளர்ந்து முன்னேறின. நாளொன்றுக்கு பதினையாயிரம் மைல்கள் அவரின் நூற்றுக்கு மேற்பட்ட

பஸ்கள் பிரயாணிகளை சுமந்தோடி சுமார் 70 நகரங் களுக்குப் பறிமாறின. பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்துடன் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நாயுடு அவர்களின் நிர்வாகத்தில் பணி யாற்றி வந்தனர். இவர்களில் 100-க்கு 68 பேர்கள் யூ. எம். எஸ். ஸ்தாபனத்திலேயே சாதாரண நபர்களா யிருந்து டிரைவர், மெக்கானிக் ஆனவர்கள். சென்னை மாகாணமே ஆச்சர்யப்படும் வண்ணம் சிறப்பான நிர்வாக அம்சங்கள். எதிலும் ஒழுங்கு—நிலை தவறி விடாமல் தன் பணியாளர்கள் பணி புரிய எல்லாவித காப்பு ஏற்பாடு களையும் நாயுடுவே தன் கவனத்தில் கொண்டிருந்தார். திடீரென்று மாறுவேடத்தில் எங்கோ ஓரிடத்தில் பஸ்ஸை நிறுத்தி சாதாரண பிரயாணியாய் மோட்டாரில் ஏறி விடுவார். தன் சிப்பந்திகள் பிரயாணிகளிடம் பொறுமை யாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ளுகிறார்களா என்பதை பரிசோதிக்க வீண் வம்புகளையும் கிளப்பிவிட்டு சத்திய சோதனைகள் நடத்துவார். ஆகையால் இந்தியா முழுதுமே மிகக்குறைந்த விபத்துக்குள்ளானது யுனைடெட் மோட்டார் ஸ்தாபனந்தான். காலந்தவறுமல் சர்வீஸ் ஓடிய பெருமையும் இதற்கேதான் தனி உரிமையாகும். 1933-ம் ஆண்டு, மேலும் மூன்று ஆண்டுகள் கடந்த பின் உலகை வாட்டிய பொருளாதார நெருக்கடி நாயுடுவின் நிர்வாகத்தை மட்டும் சும்மா விடுமா? இப்போதைப் போல் அப்போது ஏகதேச ரஸ்தா உரிமையில்லாதபடியால் போட்டிகளில் கஷ்ட—நஷ்டங்களை அதிகம் அனுபவிக்க வேண்டி வந்துவிட்டது. ஒன்றிரண்டு பஸ்களைக் கொண்ட முதலாளிகள் சிலர் நெருக்கடியாலும், போட்டிக் கடுமை யாலும் ஓட்டாண்டிகளாயினர். எனவே அம் மாவட்டத் திலுள்ள பஸ் சொந்தக்காரர்களை எல்லாம் ஒன்று திரட்டி கூட்டு முயற்சியில் யுனைடெட் மோட்டார்ஸ் என்ற ஸ்தானபத்தை நிறுவினர். முன்னிலும் பொறுப்பு அதி கரித்து விடவே நிர்வாக முறைகளில் மேலும் பெருத்த



அமெரிக்க ஜனாதிபதியின் 'வெள்ளைமாளிகை' என்கிறார்களே அதுபோல்
கோவை விஞ்ஞானியின் 'கோபால் பாக்' பங்களா—முன்தோற்றம்

மாறுதல்களுடன் விசேஷ கவனஞ்செலுத்த ஆரம்பித்தார். சுமார் 280-க்கு மேற்பட்ட பஸ்களில் நிர்வாகம் என்றால் சாதாரணமா? ஒவ்வொரு இலாகாவையும் தனித்தனியாகப் பிரித்து, ஆனால் தலைமைச் சுக்கானை மட்டும் தன் கையில் வைத்துக் கொண்டே மேலும் எதிர்காலத்தை முன்னோக்கினார் நாயுடு.

1935-ம் வருடம். நாயுடு அவர்களின் மோட்டார் தொழில் உலக கவனத்தையே பெற்றுவிட்டன. வெளி நாட்டுத் தொழில் விற்பன்னர்கள் இந்தியாவுக்கு யாத்திரை வந்தால், கோவை சென்று 'யுனைடெட் மோட்டார்ஸ்' ஸ்தாபனத்தையும் அதன் நிர்வாக மேதை நாயுடு அவர்களையும் பார்க்காமல் தங்கள் நாட்டுக்குத் திரும்புவதில்லை. உள்நாட்டு பத்திரிகாசிரியர்கள்—தொழில் முதலாளிகள்—அரசியல் தலைவர்கள் மற்றும் பல்வேறு பிரிவினருக்கும் நாயுடுவின் பேட்டியும், அவர் ஸ்தாபனத்தின் காட்சியும் ஓர் பெரிய அனுபவ கலாசாலையாகிவிட்டது. கோவை அவினாசி ரோட்டிலுள்ள யு. எம். எஸ். மத்திய காரியாலயத்தினுள் இப்போது யாரேனும் புகுந்தால் இந்தியாவென்பதையே மறந்து, அமெரிக்கா நாட்டில் இருக்கிறோம் என்ற எண்ணங்களை மனதில் கிளப்பும் பல காட்சிகள் கவனத்தைக் கவரும். பஸ்கள் வரும்—புறப்படும் காலங்களைக் காட்டும் நவீன கருவியும், தானே கணக்குப் போட்டு நமக்கு டிக்கெட் தரும் ஆச்சர்ய யந்திரமும், பெரிய புகைவண்டி நிலைய காட்சிகள்போல் பஸ்கள் வருவதும், புறப்படுவதும் அங்குமிங்கும் பிரயாணிகள் நடமாடுவதும் ஓர் நவீன புத்துலகை நமக்குக் காட்சி தரும்.

புத்திக்கு—புத்தி

இப்படிப்பட்ட நிர்வாகத் தலைவரை யாரேனும் அங்கு பேட்டி காணவேண்டுமென்றால், வாசற் காப்போன் டெலி

போனில் காரியாலய உள் அறையில் அமர்ந்துள்ள நாயுடுவைக் கூப்பிட்டு அனுமதி பெற்று அனுப்பி வைப்பான். உள்ளே சென்றால் ஓர் ஒல்லியான உருவம், பைல்கள், சுற்றிலும் யந்திரங்கள் இதற்கு மத்தியில் அநு யாசமாக அமர்ந்திருந்து வரவேற்பார். இதற்குள் சுமார் ஐந்தாறு மைல்களுக்கப்பாலுள்ள அவரின் மின்சார மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலையிலிருந்து யாரோ பேசுவார்கள். அருகிலுள்ள யந்திரப் பெட்டியில் (Amply Call........) ஏதோ ஒன்றை அழுத்திவிட்டு நாயுடு பதில் பேசுவார். மற்றொரு இடத்திலிருந்து இதே போன்று வேறொரு பிரச்சினை. அதற்கும் பதிலளித்து விட்டு நம்முடன் பேச ஆரம்பித்துவிடுவார். இடையில் ஓர் இளநங்கை, டைப் செய்த காகிதங்களை கையெழுத் துக்கு மேஜைமீது வைத்துவிட்டு நிற்பார். காலம் வீணு காமல் கையெழுத்தையும் போட்டபடியே நம்முடனும் சம்பாஷணை நீடிக்கும். டைப் கடிதத்திலுள்ள சந்தேகங் களுக்கும் கேள்வி போட்டு நின்றிருக்கும் மங்கையரின் வாயிலிருந்தே ஏதேதோ முக்கிய விஷயங்கள் வந்துகொண் டிருக்கும். சுமார் ஒருமணியோ, இரண்டு மணியோ, பேட்டிக்குப் போகிறவர்கள் புத்தியின் அளவுக்கு விஷய தானமும் வெகு நிச்சயம் அவரிடமிருந்து தாராளமாய்க் கிடைக்கும்.

திரு. நாயுடு அவர்களின் நிர்வாகத் திறமையைக் குறித்து திரு. பத்ரிராவ் என்பவர் எழுதிய ரோட்—ரயில் போக்குவரத்து, என்ற நூலில் ‘சமுதாயப் பொருளாதார நலன்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த முறையிலும், வசதி களுடனும் போக்குவரத்து சாதனங்களை உதவி வரும் யு. எம். எஸ். ஸ்தாபனம் பாராட்டப்படக்கூடியது, என்று குறிப்பிட்டிருப்பதுடன் பொருளாதார அறிஞர் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் ‘யுனைடெட் மோட்டார் ஸ்தாபனம் அபரிமிதமான ஆர்வமுடைய



இந்தியாவிலேயே மிகப்பெரிய மோட்டார் ஜங்ஷன் பல்லடம் யு. எம். எஸ். நிலையம்

ஒருவரை நிர்வாகத் தலைவராகப் பெற்றிருக்கும் அதிர்ஷ்டமுள்ள சாதனமாகும், எனக் கூறியிருப்பது மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பிரயாணிகள் வசதிக்கென பல்லடம் சந்திப்பில் அவர் கட்டியுள்ள இந்தியாவிலேயே மிகப்பெரிய மோட்டார் ஜங்ஷன் கட்டிடத்தைக் கண்ணுற்றோர் யாரும் நாயுடுவின் ஆர்வமிக்க துணிச்சலைப் பாராட்டித்தான் தீரவேண்டும். பாலக்காடுபோன்ற வேறு சில இடங்களிலும் அந்த ஊர் நகரசபைகள் நியாய புத்தியுடன் நடந்துகொண்டிருந்தால் அங்கும் இப்படிப்பட்ட கட்டிடங்கள் வானளாவியிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்கா இறக்குமதி

தனிப்பட்ட வாழ்வில் திரு. நாயுடு அபூர்வமிக்க குணங்களை தன்னுடன் கொண்டு ஜனித்தவர். எதிலும் அமெரிக்க நாகரீக பழக்கவழக்கங்களை பெரிதும் அனுஷ்டிப்பவர். சாமான்கள் சுத்தமாகவும், மற்ற எதுவுமே கண்ணுக்கினிமையாய் அமைக்கப்படவேண்டுமென்பதில் பிரமாத அக்கரையுடையவர். உதாரணமாக அவர் தம் பங்களாவான 'கோபால்பாக்' உள் நுழைந்தோமானல் அமெரிக்க ஜனதிபதியின் 'வெள்ளை 'மாளிகை' என்கிறார்களே அதுபோல் தூய வெண்ணிறக் காட்சியே எங்கும் பிரகாசமளிக்கும். சுமார் 10 வெவ்வேறு தொழில் பிரிவுகளைக்கொண்ட பிளாக் அங்கிருக்கிறது. பொருட் செலவைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த பங்களாவின் பரப்பளவு பூராவும் சிமெண்ட் போடப்பட்டு எங்கும் சுத்தமாய்க் காணப்படும். அவரின் உணவுக் கூடம், பெரிதும் ஆஸ்பத்திரியையே நமக்கு ஞாபகமூட்டும். சுவற்றில் கை வைத்தால் தண்ணீர்—வெந்நீர்—சோப்—அதன் பக்கத்தில் கை துடைக்க துண்டுகள். மேனாட்டு முறைகளைத் தழுவி தரைக்குக் கீழ் மின்சாரக் கம்பிகளும் அமைந்திருக்கும். சமீபத்தில் அழிப்பதற்காகவே கட்டப்பட்ட கட்டிடம் (Construction for Destruction) என்ற பெரிய

ஹாலின் நீளம் 370 அடி. அகலம் 75 அடி. காலை முதல் மாலைவரை அந்த ஹாலில் எந்தப் பக்கமும் நிழல் விழாது எதிரொலியோ, பிற அசௌகர்யங்களோ அங்கு ஏது மில்லாமல் மிக நன்றாய் காட்சி தரும். சுவரின் மற்றொரு பக்கம் மனிதனுக்கு சராசரி வேண்டிய உணவுப் பொருள் —வைடமின் விளக்கப் போர்டுகள். இப்படி அமெரிக் காவையே கோவைக்கு (தன் சம்மந்தப்பட்ட காரியாலயம் —வாசஸ்தலங்களில்) இறக்குமதி செய்திருக்கிறார் நாயுடு.

கொடையில் குமணன்

பழக்க வழக்கங்களைப் போலவே, கொடைத்தன்மை யிலும் 'ஊருணி நீர்நிறைந்தற்றே; உலகவாம் பேரறிவாளன் திரு; என்ற திருவள்ளுவரின் பொய்யா மொழிப்படி பரோபகார காரியங்களில் நாயுடு ஈடு இணையற்றவர். 'சரி—நியாயம்' என்று மனதில் பட்டுவிட்டதை உடன் செய்வ தில் அவர் பொருள் அளவைப்பற்றிக் கவலை கொள்வ தில்லை. ஒரு சமயம் கோவை ஜில்லா போர்டார் தன்னு டைய 18 லட்ச ரூபாய் மதிப்புள்ள மோட்டார் ஸ்தாபனத் தை அப்படியே ஏற்றுக் கொண்டு நடத்திகொள்ளலாமென் றும், இதற்காக தனக்கு ஒரு தம்பிடியும் விலை கொடுக்கத் தேவையில்லை என்றார். ஆனால் அந்த வருமானத்தை அப் படியே அவர்கள் தொழில் கல்விக்காகச் செலவிடவேண்டு மென்றும் கடிதம் எழுதினார். ஜில்லா போர்டார் பதில் பேசவில்லை. இதேபோல் தம்மிடமிருக்கும் பெரிய (லைப்பரேரி) நூல் நிலையம் 67000 புத்தகங்களடங்கிய சுமார் 20000 ரூபாய் மதிப்புள்ளதுமான அதனை கோவை நகரசபையாரிடம் ஒப்படைத்து விடுவதாகவும் இதற்காக ஒரு கட்டிடம் கட்டபத்தாயிரம் ரூபாயும், அதையடுத்து ஓர் நீச்சுத்தடாகம் கட்டமேலும் ஒரு பத்தாயிரம் ரூபாயும் நன்கொடை கொடுப்பதாகவும், ஒப்புக் கொள்ளவேண்டு மென்றும் நிர்வாகிகளுக்கு வலிய விண்ணப்பம் போட்டார்.

கோவை நகரசபையாரும், கோவை ஜில்லா போர்டாரைப் பின்பற்றி பெரிய புத்தியுடன், வாளாவிருந்து விட்டனர். இதற்குக் காரணம் ஓர் குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு இந்த இரண்டும் அச்சமயம் அடிமைப்பட்டிருந்ததே முக்கிய தடையாகும்.

நம்நாட்டு இளைஞர்கள் ஒவ்வொருவரும் தொழில் நிபுணர்களாகிவிட வேண்டுமென்பதில் பிடிவாதமான அக்கரையுடைய நாயுடு, பிறிதொரு சமயம் தன் பஸ்கள் நடமாட்ட எல்லைக்குள் உள்ள நகரசபைகளிடம் தன்னுடைய கம்பெனி பங்குகளில் பெரும்பாலானவற்றை பிரித்துக் கொடுத்து விடுவதாகவும், அதற்காக அந்நகரசபைகள் அப்பங்குகளுக்கு ஏதும் விலை கொடுக்கத் தேவையில்லை என்றும், ஆனால் பங்குகளின் மூலம் கிடைக்கும் லாபத் தொகைகளைப் பெற்றுக்கொண்டு ஆங்காங்கு தொழிற் கல்வி பாடதிட்ட நகல்களுடன் சுற்றறிக்கை விட்டுக் கேட்டார். ஏதோ ஒரு நகரசபை மட்டும் திட்டத்தைத் திருப்பி அனுப்பி, தங்கள் இயலாமையைக் கூறியது. மற்றவைகளோ சம்பிரதாய மரியாதைக்களைக்கூட தெரிந்து கொள்ள முடியாமல் மௌனம் சாதித்து விட்டன. நாயுடு என்ன செய்வார்? அநீதியான—அக்ரம உலகைப்பார்த்து வியந்தார்—மனமிடிந்தார். ஆனாலும் தன் கடமையில் அவர் ஒரு போதும் பின்னடைந்ததில்லை. முயற்சிகளையும் குறைத்துக் கொண்டதில்லை.

கருவில் சிதைந்த கைத்தொழில்கள்

கோயமுத்தூரில் மோட்டார் வண்டிகள் உற்பத்திச் சாலையை நிறுவுவது என்றும், அதற்காக மூன்று தென்னிந்திய சுதேச சமஸ்தானங்கள் இசைந்தும் தொழிற்சாலை ஸ்தாபிக்கும் இடத்தை ஒன்றுக்கு ஒன்று ஒத்துக்கொள்ளவில்லை. உலகிலுள்ள மொத்தம் 43 டியசல் பெரிய மோட்டார் தொழிற்சாலைகளில் 39 தொழிற்

சாலைகளை நேரில் சென்று கண்டறிந்து, பிரபல பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தி ஸ்தாபனமான ஜோசப்சாங்கி என்ற கம்பெனியாருடன் ஒப்பந்தமும் செய்து மேல் நடவடிக்கைகளை கவனிக்க முன்னொரு சமயம் சென்னையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக வேலைபார்த்த மிஸ்டர் சி. ஏ. கன்னிங்ஹாம் என்பவரையும் பிரதிநிதியாய் நியமித்திருந்தார்.

1938-ஆண்டில் சென்னை சர்க்கார் தொழில் இலாகா மந்திரியாயிருந்த திரு. வி. வி. கிரி அவர்கள் நாயுடு அவர்களின் திறமையும் அனுபவங்களும் துருப்பிடித்து நாட்டிற்குப் பயன்படாமல் போய்விடக் கூடாதென்று பெரிதும் முயற்சி மேற்கொண்டதின்பேரில், திரு. நாயுடு அவர்கள் மீண்டும் தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்கான தளவாடசாமான்கள், திட்டங்கள். (Design) மாதிரி உட்பட தயாரித்து மாகாண சர்க்கார் சிபார்சுடன் இந்திய சர்க்காருக்கு அனுப்பினர். ஆனால் எதையும் காலதாமதப்படுத்தி கை விரித்துவிடுவது என்ற வழக்கமான கொள்கையை அனுஷ்டித்து இந்திய சர்க்கார் மூலதனப் பங்கீட்டுக்கு அனுமதிமறுத்துவிட்டார்கள். ஆனால் ஜி. டி. நாயுடுவை அந்தச் சமயம் கோவைக்கு வந்து பேட்டிகண்டு சென்ற வடஇந்திய முதலாளி ஜி. டி. பிர்லாவுக்கு, பிறகு மோட்டார் உற்பத்தி தொழிலுக்கு பங்கு அனுமதிமட்டுமின்றி, பெரும் அளவுக்கு வெளிநாட்டு தேவை இறக்குமதிக்கும் எல்லா விதமான வசதிகளும் கிடைக்கக் காணப்பட்டது. மாதம் ஒன்றுக்கு சுமார் 100 மோட்டார்கள் குறைந்த விலையில் நல்ல உழைப்பில் நம்நாட்டில் கிடைக்கவேண்டிய திருந்த நல்ல அதிர்ஷ்டம் இங்ஙனம் கருவில்சிதைந்தது. ஆனால் (Toy Motar) விளையாட்டு மோட்டார் என்ற ஒன்றை தன் சாதனைக்கு அடையாளமாக திரு. நாயுடு இப்போதும் செய்துவைத்திருக்கிறார். 1 அவுன்ஸ் பெட்ரோலை ஊற்றி அதை ஓடவிட்டால் சுமார் ஒரு மைல் ஓடுகிறது.

சென்னை, மாஜி தொழில் மந்திரி
வி. வி. கிரியும், திரு. நாயுடும்.

ஆனால் தனக்குத்தானே கடைசிமூச்சு உள்ளவரை முயற்சித்து, முடிந்ததைப் பார்த்துவிடுவது என்ற நம்பிக்கையில் இந்தியாவிலேயே முதன் முதலாக 'எலக்டிரிக் மோட்டார்' உற்பத்தி தொழிற்சாலையை 1939 ஸு ஆரம்பித்தார். இதை அந்நாள் சென்னை சர்க்கார் ஆலோசகராயிருந்த சர். ஜார்ஜ் போக் திறந்துவைத்தார். யுத்த நிலைமையின் காரணமாக வெளிநாட்டிலிருந்து எலக்டிரிக் மோட்டார்கள் கிடைப்பது கஷ்டமாயிருந்த காரணத்தாலும், இந்தியாவில் வேறெங்கும் இம் முயற்சி வெற்றிகரமானதாய் யாராலும் செய்யமுடியாமலிருந்தபடியாலும் இந்திய சர்க்கார் இதில்மட்டும் ஏனோ தங்கள் மனமாற்றத்தைச் சிறிது காண்பித்தனர். ஆனால் காலப்போக்கில் விரிவான ஏற்பாடுகளைச்செய்ய மற்ற நாணய வசதி, இறக்குமதி லைசென்ஸ் போன்றவைகளில் இதற்கும் இடையூறுகள் தோன்றிவிட்டன.

யந்திர விஞ்ஞானி

1941-ம் வருடம், இதேபோல் ரேடியோ உற்பத்தி தொழிற்சாலையையும் திரு. நாயுடு தொடங்கினார். அதாவது ஐந்துவால்வுகளைக் கொண்ட ஒரு ரேடியோபெட்டி 75 ரூபாய் விலையில் முடிகிறமாதிரியும் நீண்ட காலம் உழைக்கக்கூடிய உறுதியிலும் திட்டமிடப்பட்டிருந்தது. இந்திய சர்க்கார் மாஜி நிதி மந்திரி சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இதை திறப்புவிழா வாற்றினார். வெளிநாட்டிலிருந்து தற்காலீகமாய் எதிர்பார்க்கப்பட்டது 'வால்வ்' கள்மட்டும்தான். ஆனால் இதற்கும் இந்திய சர்க்கார் மாமூல்படி கைவிரித்துவிட்டனர். இதற்கான காரணங்கள் என்னவோ நமக்கெல்லாம் ஓர் புதிராயிருக்கின்றது. தென்னாட்டின் தொழில் வளர்ச்சியை வடநாட்டாதிக்கத்திற்குட்பட்ட இந்திய சர்க்கார் விரும்பவில்லைபோலும்!



கோவை பீளமேட்டில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முதல் மின்சார மோட்டார் உற்பத்திசாலை இதில் செய்யப்பட்ட 'எலக்டிரிக் மோட்டார்கள்' அநேகம் பஞ்சாலைகளிலும், விவசாய தண்ணீர் இறைப்பிற்கும் ஏராளம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

காலம் வீணாகிறதே! கொலைசெய்யப்படுகிறதே!! என்று கண்கலங்கிய நாயுடு தன்னுடைய அனுபவங்களையும், திறமைகளையும் இங்ஙனம் உற்பத்தித் துறையில் செலவிட முடியாதுபோகவே, நம்நாட்டு இளைஞர்களுக்கேனும் சொல்லி வைத்து—காட்டிவிட்டு போகலாம் என்ற ஆறுதலில் 1945-ஆம் ஜுலை-மீ 9-ம் தேதி லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்கள்—சாமான்களுடன் ஆர்தர் ஹோப் எஞ்சினீரிங் காலேஜ், என்ற கல்லூரியை நிறுவி சர்க்காரிடம் ஒப்படைத்தார். கொடுத்த தானத்தையும் உடன் ஏற்று அப்போது அனுபவிக்க முடியாதிருந்த சென்னை சர்க்கார், திரு. நாயுடுவை சிறிதுகாலம் டைரக்டராகயிருக்க நிபந்தனை—விரும்பினர். அதன்படி நான்கு வருஷ காலம் நாயுடு கௌரவ டைரக்டராக இதில் பணி புரிந்தார். அதே ஆண்டு சில மாதங்களுக்குப் பின் மோட்டார்—ரேடியோ ஆகிய இரண்டு தொழிலுக்கான பயிற்சி யளிக்க 'ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக்' என்ற கல்லூரி ஒன்றையும் தன் பெரும் பொருள் செலவில் நிறுவித்தந்தார். இப்பாட போதனைக்கான திறமைபெற்ற நிபுணர்கள் கிடைக்காமையால் திரு. நாயுடுவே இதன் ஆசிரியப் பொறுப்பையும் நிர்வாகத் தலைமையையும்சர்க்கார் விருப்பத்திற் கிணங்க ஏற்றுக்கொண்டார். இருபத்தி நான்குமணி நேரத்தில் 20 மணி நேரம் இப்போது சலியாத-ஓயாத உழைப்பு திரு. நாயுடு அவர்களுக்கு!

கண்டுபிடிப்பாளர்

திரு. ஜி. டி. அவர்கள் மிகச் சிறந்த மோட்டார்—யந்திர மேதைமட்டுமில்லை. மற்றும் பல நவீன விஞ்ஞானக் கருவிகளின் (inventer) கண்டு பிடிப்பாளருமாவார். சுமார் 10 வருடங்களுக்கு முன் மின்சார க்ஷவரக்கத்தி ஒன்றைக் (Rasant Electric Safety Razor) கண்டு பிடித்தார். ஒரு அங்குலத்தில் 200-ல் ஒரு பாகம் கன



திரு நாயுடுவின் பெருங்கொடையால் தோன்றிய
கோவை என்ஜினீயரிங் காலேஜ்
மாஜி கவர்னர் சர். ஆர்தர் ஹோப்
வலதுபுறம் நாயுடு நிற்கிறார்.

அளவுக்கு (1/200'') மிகவும் மெல்லிய 'பிளேடும்' இதற்காக உற்பத்தி செய்யப்பட்டது. மிகச் சிறிய பாட்டரியை உள்வைப்பதன் மூலம், ஸ்விட்சை தட்டியவுடன்தானே இயங்கி 200 தடவைகள் சுகமாய் க்ஷவரம் செய்யக்கூடிய ஓர் அற்புத சாதனம். இதற்கு இந்தியாவில், சென்னை, கல்கத்தா, லட்சுமணபுரி போன்ற நகர கண்காட்சிகளில் மட்டுமில்லாமல் ஜெர்மன் லீப்ஸ் நகர விஞ்ஞானக் காட்சியிலும் விசேஷ பரிசளிக்கப்பட்டது. இந்தியர் ஒருவரின் திறமையைக்கண்டு மேனுட்டார் திகைத்தனர். பிரிட்டிஷ்-ஜெர்மனி வர்த்தக ஸ்தாபனங்கள் வரவேற்றன. அமெரிக்க கைத்தொழில் ஸ்தாபனமொன்று 10 லட்ச ரூபாய்கள் விற்பனை உரிமை தருவதாகவும் நாயுடுவைக் கேட்டுக்கொண்டது. சாதாரணமாய் 18 லட்ச ரூபாய் செலவில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்குமானல் இந்தியாவின் (க்ஷவர பிளேடு) மொத்த இறக்குமதி 2 கோடி ரூபாய் வெளிநாட்டுக்குப் போகாமல் ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டில் மிச்சப்பட்டிருக்கும்.

1936ம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 100க்கு மேற்பட்ட அற்புத விஞ்ஞான உண்மைகளை தானே கண்டுபிடித்திருக்கிறார். பஸ்களின் அதிர்ச்சியை சோதிப்பதற்கான யந்திரம் (Vibrator Testing Machine) ஒளி சமன யந்திரம் (Distance Adjuster) கணக்குப்போடும் கருவி (Calculating Machine) டாய்மோட்டார் (Toy Automobile) தூரதிஷ்டிக் கண்ணுடி (Lence) நுண்ணிய அளவையந்திரம் (1/2000th "Measuring Machine) ரிப்ரிஜிரேடர் (Refrigerator) ஒலிப்பதிவு (Recording Machine) ரேடியோ கடிகாரம் (Radio Clock) ஓட்பதிவு யந்திரம் (Vote Recording) காபிசப்ளையர் (Coffee Meet Supplier) துலக்கும் மிஷன், காசைப்போட்டால் தானே பாடும் கருவி (Slot Singing Machine) போன்ற பலவற்றை வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிறார். இது



திரு நாயுடுவின் மற்ருெரு பெருங்கொடை, மோட்டார்-ரேடியோ தொழிற் பயிற்சிக்கான கோவை பாலி டெக்னிக் காலேஜ். இந்திய சர்க்கார் மாஜி சப்ளை மந்திரி சர். எ. ராமசாமி முதலியார் விஜயஞ் செய்தபோது எடுத்த படம்.

மட்டுமில்லாமல் சுமார் 25 லட்சரூபாய் களுக்குமேல் விலை மதிப்புள்ள நவீன விஞ்ஞானக் கருவிகளும் அவரின் 'கோபால் பாக்' வாசஸ்தலத்தைச் சூழ்ந்திருக்கின்றன• ரோல்ஸ் ராய்ஸ்கார், ஏரோப்பிளேன் போன்றவை உட்பட வெவ்வேறு யந்திரக் கருவிகள், எஞ்சினீரிங் மாணவர் களின் அனுபவப்படிப்பு (Practical Training) நிமித் தம் தினசரி உபயோகப்பட்டு வருகிறது•

அமெரிக்க மோட்டார் மன்னர் ஹென்றி போர்டைப் போல, நாயுடு யந்திர நிபுணர். தாமஸ் ஆல்வா எடிசனைப் போல சாதனையின் சலியா உழைப்பாளி• ஈஜின் மேயர் என்ற கோடீஸ்வரரைப் போல வாழ்க்கையை திட்டங்களாய் அமைத்துக் கொண்டவர். என்றாலும் போர்டைப் போல தன் மேதையை தனக்கென குபேர சம்பத்துக் களாக்கிக் கொள்ளவில்லை. எடிஸனைப்போல் எந்த ஒன்றை யும் 'தன் உரிமை' என்று நாயுடு எப்போதும் கூறிக்கொள்ள வில்லை• போர்டையும் எடிசனையும், நாம் எக்காளமிடும்படி 'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு, காமுறுவர் கற்று அறிந்தார்' என்றவாறு இந்த நாட்டு மக்கள் எல்லோருக் கும் பொது உரிமையாயிருக்க தாராள மனோபாவம் காட்டியிருக்கிறார். அவருடைய சாதனைகளை யாரும் செய்யலாம். சந்தேகம் ஏற்பட்டால் அவர்களுக்குக் காண் பித்துக் கொடுக்கவும் தயாராயிருக்கிறார். இதற்கெல்லாம் அவர் விரும்பும் பிரதிப்பயன், இந்த நாடு எதற்கெடுத் தாலும் பிற நாட்டை நம்பிக் கொண்டிருக்காமல் உள் நாட்டில் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு மக்கள் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற ஒரே பரந்த எண்ணந் தான். ஆனால் இப்படிப்பட்ட பரந்த உள்ளத்திற்கு சர்க்காரோ, நம் மக்களோ அவரிடம் காட்டும் மனோபாவம் என்ன ?

தாவர விஞ்ஞானி

நவீன யந்திர வளர்ச்சி-உற்பத்தியில்தான் நம் நாட்டு நிலைமை இப்படி என்றால், உணவுப் பொருள் உற்பத்தியிலுமா பிறநாட்டை எதிர்பார்த்திருக்க வேண்டும்! ஆண்டொன்றுக்கு நூறு, இருநூறு கோடி ரூபாய்கள் இந்தக் காரணத்திற்காக பொக்கிஷத்திலிருந்து கரைந்துக் கொண்டிருந்தால் இந்நாடு பிற துறைகளில் கவனஞ் செலுத்துவதுதான் எப்போது? இந்திய சர்க்கார் இது விஷயத்தில் கூடவா, திரு நாயுடு அவர்களின் சாதனைகளை திரும்பிப் பார்க்கக் கூடாது? வேற்றுமை வெறுப்புகள் உணவு விஷயத்திலுமா நீடிப்பது? அதிக உணவு உற்பத்தி என்பதன் பெயரால் சர்க்கார் போடும் பெரிய, வானளாவிய திட்டங்களுக்கு மத்தியில் கோவையிலுள்ள பருத்திச் செடியையும், சோளச் செடியையும் மட்டுமாவது இவர்கள் ஏன் கண் திறந்து பார்க்கக்கூடாது?

கீழ் தேசத்து விஞ்ஞானி என்று புகழப் பெறும் சர். சி. வி. ராமன் அவர்கள் திரு நாயுடு அவர்களை யந்திர மேதை மட்டுமில்லை, பெரிய தாவர விஞ்ஞானி என்றும் கூறுகிறார். அடுத்துள்ள படத்தில் இரண்டு பெரிய சாதனைக்காரர்களுமே நிற்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் காணப்படுவதுதான் ஓர் பருத்திச் செடி. அதன் உயரம் 10 அடி. அதிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக $2\frac{1}{2}$ அங்குல இழையுள்ள 24 ராத்தல் பருத்தி கிடைக்கிறது இந்தச் செடியின் விதையை மறுபடியும் விதைத்தால் 5 மாதங்களுக்குள் 5 அடிக்குமேல் வளர்கிறது.

இதேபோல் மற்றொரு சோளச் செடி $18\frac{1}{3}$ அடி உயரம் வளர்ந்திருக்கிறது. 26 கிளைகள் - எல்லாத் தண்டின் நீளம் 181 அடி. 39 கதிர்கள் விட்டிருக்கின்றன.



Sir C. V. Raman G. D. Naidu
"Gopal Bagh" Coimbatore 15—11—48
(a millet plant of 14½ feet height with 9 cobs)

திரு. நாயுடுவின் சிருஷ்டிகளில் உற்பத்தியான
அதி அற்புதமான சோளச் செடியின் அருகில்
சர். C. V. ராமனும், திரு. நாயுடுவும்.

ஓர் ஆண்டுக்கு ஒரு ஏகர் பூமியில் 125 ராத்தல் பருத்திக்கு விவசாய இலாக்காக்களும், அறிஞர் – நிபுணர்களும் பெரும் போராட்டம் நடத்துகிறபோது 6 செடிகள் ஒரு ஏகர் விளைவைக் கொடுக்கிறதென்றால் ஆச்சரியமில்லையா? அற்புதமில்லையா? இரு மூன்று கதிர் சோளமே ஒரு செடிக்கு அதிர்ஷ்டம் என்கிற நிலைமையில் 39 கதிர்கள் காணப்படுவதை மக்கள், சர்க்கார் திரும்பிப் பார்க்க வேண்டாமா? இதற்காகவெல்லாம் நாயுடு அவர்கள் செய்த பெருமுயற்சி ஏதோ ஒரு மருந்தை ஊசியின் மூலம் செடியினுட்புகுத்தி வெற்றி கண்டது தான். இதேபோல் வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம் ஆகியவைகளையும் தன் பரீட்சைக் குள்ளாக்கி அற்புத வெற்றி கண்டிருக்கிறார். 25 ஆரஞ்சுப் பழங்களை ஒரு ஆரஞ்சாக காய்க்கச் செய்து பிறகு 25 பங்கு நீருடன் சேர்த்துச் சாப்பிடலாம் என்கிறார் இந்த தாவர விஞ்ஞானி.

அமெரிக்கர் பாராட்டு

‘சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு’ என்கிறார் திருவள்ளுவர். இதுபோல் யந்திரம் முதல் தாவரம், செடி கொடிகள் வரை உலகை அறிந்த நவயுக மேதையை அவர் பிறந்த நாடு இருட்டறையில் வைத்து, காலத்தைக் கொலை செய்ய, பதினாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்கா என்ன கூறுகிறதென்று கவனியுங்கள்.

‘மிஸ்டர் நாயுடுவின் சிறந்த சிருஷ்டிகளை, எங்களைச் சேர்ந்த பலர் மிக அபூர்வமாக மதிக்கிறார்கள். ஆனால் அவர் அவைகளை எங்களுக்கு உரிமை கொடுக்க மறுக்கிறார். இங்குதான் அவைகளை நல்ல துகைக்கு விற்பனை செய்ய தகுந்த இடம். அமெரிக்க மக்களாகிய நாங்கள் எப்போதும் வாங்கிக்கொள்ள சித்தமாயிருக்கிறோம்.’

[illegible] Naidu, G. Ramaswamy and G. D. Naidu

நாயுடு பயிர் செய்திருக்கும் அதி அற்புத பருத்திச் செடி.

'...மிஸ்டர் நாயுடு உதார குணமுள்ளவர். ஒரு முக்கிய யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகளைத் தீர்ப்பதில் அவர் கூறிய சில வார்த்தைகள் 2000 டாலர்கள் வீண் செலவைத் தடுத்தது.' மேலேயுள்ள பாராட்டுகள் மட்டுமில்லை. அமெரிக்க தொழில் நிபுணர்கள் - முதலாளிகள் அந்த நாட்டிற்கு நாயுடுவின் வரவை இரு கரமேந்தி வரவேற்கக் காத்திருக்கிறார்கள். அவரின் க்ஷவரக்கத்தியையும், பிளேடையும் மட்டும் செய்து கொள்ள ஆலோசனை சொல்லிக் கொண்டிருந்தால் 3000 டாலர் மாதச் சம்பளம் தரத்தயாராயிருக்கிறோம் என்கிறார்கள். மற்ற சாதனைகளைப் பற்றியும் இப்படி பெரும் பொருள் வருவாய்க்கு அமெரிக்கா அழைக்கிறது உலகறிந்த தென்னிந்திய விஞ்ஞானியை! ஆனால் இந்தப் 'புண்ணிய பாரதத் திருநாடோ...?'

மேனாடு யாத்திரை

1932-ம் ஆண்டில் திரு. நாயுடு அவர்கள் முதன் முதலாக மேனாட்டு யாத்திரையை ஆரம்பித்தார். இது வரை மூன்று தடவைகள் உலக யாத்திரை செய்து, அநேகமாக உலகின் எல்லா நாடுகளையும், நகரங்களையும் சுற்றிப் பார்த்தார். ஆங்காங்குள்ள அரசியல்-தொழில் நிபுணர்களையும், உற்பத்தி சாலைகளையும் பார்வையிட்டார்.

நாயுடுவின் உலக சுற்றுப் பிரயாணத்தில் அவர் கண்டு கேட்ட அனுபவங்களை நாம் தெரியுமுன், அவர் முதல் யாத்திரையில் அவருக்கு நேர்ந்த பேராபத்துகளை அறிவது அவசியம். கடல், தரை, ஆகாயம் ஆகிய மூன்று மார்க்கங்களிலும் பெரிய கண்டங்களை சந்தித்து மீண்டார்.

கொழும்பு துறைமுகத்திலிருந்து 'ஜார்ஜ் பிலிப்பர்' என்ற பிரஞ்சு உல்லாசக் கப்பலில் நான்கு நாட்கள் கொந்தளிப்பான கடலில் பிரயாணம் செய்தபின் ஐந்தாம்

நாள் அதிகாலை திடீரென கப்பலுக்கு தீ விபத்து ஏற்பட்டு விட்டது. ஏராளமானோர் மாண்டனர். யாத்திரீகர்களில் மூன்று பேர்கள் மட்டுமே உயிர் தப்பினர். இந்த மூவரில் நாயுடுவும் ஒருவர். டிஜிபௌட்டி (Diji Bouti) என்ற இடத்தில் ரஷ்யா எண்ணைக் கப்பல் ஒன்றால் கரை சேர்க் கப்பட்டார்.

சகுன பேதத்திற்கே பிரயாணத்தை ஒத்திப்போட்டு விடும் நாட்டில் பிறந்த நாயுடு, இவ்வளவு பெரிய மரண கண்டத்தைக் கண்டும் மனம் மாறினாரில்லை. மேலும் பிரயாணத்தைத் தொடர்ந்தார். மார்ஸ் செயில்ஸ் வந் தடைந்ததும் ஜெர்மனியிலுள்ள ஹனோவர் என்ற நகரில் தன்னை அழைத்திருந்த குவென்ஸ் என்ற ஜெர்மன் தொழில் நிபுணரை சந்திப்பதற்காக சென்று இரண்டொரு தினங்களிருந்துவிட்டு உடனே அமெரிக்கா சென்று விட்டார். அங்கு சில வாரங்களில், முக்கியமாக மோட் டார் சம்பந்தமான தொழிற்சாலை—நிபுணர்களை சந்தித்து விட்டு, இதற்கிடை இங்கிலாந்துக்கும் சில நாட்கள் சென்று தங்கிய பிறகு அமெரிக்க மேற்கு கடற்கரை மார்க்கமாய் ஜப்பானுக்குச் சென்றார். கப்பல் தீ விபத்து காரணமாய் தனது முக்கிய தஸ்தாவேஜிகள், பொருள் களையும் இழந்துவிட்டபடியால் திட்டமான ஏற்பாடு களுடன் யாத்திரையில் அவர் எதையும் செய்ய முடிய வில்லை. என்றாலும் மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனா, தாய்லாந்து, மலேயா, சிலோன் ஆகிய நாடுகளிலும் சில வாரங்கள் தங்கி சுற்றிப் பார்த்துவிட்டே இந்தியா திரும்பினார். விபத்துக்களில் மீண்டதைப் போலவே மேனாட்டு நவ நாகரீகமணிகளின் மாயவலை வீச்சிலும் விழாதபடி தப்பி வந்தார். 'மது, மங்கை, மாமிசம் கூடாது' என்ற கொள்கையில் அவர் ஒரு மகாத்மா— ஒரு சமயமும் தவறிவிடவில்லை. பல விஷப் பரீட்சைகள் இந்த இரும்பு நெஞ்சரிடம் படுதோல்வியடைந்தன.

Clock with 6 feet dial and 4 faces made in the U. M. S. Radio Factory at "Gopal Bagh". Dr. C. S. Ramasami Iyer, Sir C. V. Raman and G. D. Naidu Coimbatore 24—3—1948

யு. எம். எஸ். தொழிற்சாலையில் உருவான வருடம், மாதம், தேதி கிழமை, மணி காட்டும் கடிகாரம். 'கோபால் பாக்' நாற்புறமும் காட்சி தருகிறது. சர். சி. வி. ராமன் நாயுடுவின் இந்த சிருஷ்டியையும் கண்டு வியந்தார்.

கப்பல் விபத்தைவிட, லண்டன் நகரை வந்தடைந்து ஒரு நாள் எக்ஸெடர் நகரத்திலிருந்து தலைநகருக்கு திரும்பி வந்து கொண்டிருக்கிறபோது, மிஞ்ச முடியாத ரயில் விபத்து திரு நாயுடுவை பலி கொள்ளக் காத்திருந்தது. ஆனால் அந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் நாயுடு டிக்கெட் ரிசர்வ் செய்திருந்தாராளுலும் அகஸ்மாத்தாக அதற்கு சில மணி நேரம் முன்னால் புறப்படும் சாதாரண ரயிலொன்றின் மூலம் லண்டன் நகருக்குத் திரும்பிவிட்டார்.

இதே போன்று டோக்கியோவிலிருந்து, கொரியாவுக்கு ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்யவேண்டி வந்தது. விமானம் கடலுக்கு மேல் பறந்து செல்லும் போது அபாயகரமான சூராவளிக்காற்று விமானத்தை மோதி அலக்கழித்தது. என்றாலும் விமானம் நிலையம் சேர்ந்துவிட்டது. ஆனல் கடற்கடையையடுத்த பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் நாசமாயின என்று பின்னர் தெரியவந்தது.

கப்பல், ரயில், விமானம் தென்னிந்திய தொழில் விஞ்ஞானிக்கு கருணை காட்டியதே போல் சைன தேசத்து கொள்ளைக்கூட்டமும் அவரிடம் சிறிது பரிவு காட்டியது. சைனவில் பீக்கிங் நகரிலிருந்து கோபி பாலைவனத்தைக் கடந்து, சரித்திர பிரசித்தமான பெரிய மதிற்சுவரை (Great Wall) பார்த்துவிட்டு மங்கோலியாவை நோக்கிச் செல்லுகையில் கொள்ளைக்கூட்டம் மறித்தது. நாயுடுவின் தோற்றமோ என்னவோ அவரது பதிலில் அவர்கள் வழி விட்டுவிட்டனர்.

'உலக சுற்றுப் பிரயாணம் மனிதன் அறிவை விருத்தி செய்வதுடன் வாழ்நாளில் தேவையான உண்மைகளையும் அறிய உதவுகிறது' என்று கூறும் நாயுடு அவர்களுக்கு இந்த விபத்து அனுபவங்களும் இன்றியமையாதன போலும்!

1933-ம் ஆண்டு கடைசியில் கொழும்பு மார்க்கமாய் நாயுடு அவர்கள் தாயகம் திரும்பினூர். புறப்பட்டபோது அலட்சியமாயிருந்த நம் நாட்டுப் பத்திரிகைகள் அவரது திறமையை மேனுட்டின் மூலம் தெரியநேர்ந்து பிரமாத மாக வரவேற்புரைகள் கூறின. நாயுடுவின் நண்பர்கள் சென்னை எழும்பூரில் அவரை வரவேற்கக் கூடியிருந்தனர். ஆனால் இத்தனை விபத்துக்களையும் தானே கடந்து மீண்ட நாயுடு, அவர் தம் நண்பர்கள் பங்குக்காக ஒரு 'தமாஷ் விபத்தை' உண்டு பண்ண கருதிவிட்டார் போலும்! எழும்பூருக்கு முதல் ஸ்டேஷனில் இறங்கிவிட்டார் என்றாலும் நாயுடுவை அவரின் நண்பர்கள் விட்டுவிடவில்லை. 'ஜார்ஜ் பிலிப்பர்' கப்பலில் மீண்ட நாயுடுவை அவர் புனர்ஜன்மம் பெற்றதாய்க் கருதி ஆர்வம் மிஞ்சி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வரவேற்றனர்.

இரண்டாவது யாத்திரை

ஊர் சுற்றிய பறவை கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்புமா? லட்சக் கணக்கான பண வருவாய் களும் அவருக்கு அலட்சியமாகப்பட்டன. அவரின் சுற்றுப் பிரயாணத்தில் அவர் பல்வேறு நாடுகளில் அரை குறையாய் கண்டறிந்திருந்த நவீன ஆராய்ச்சிகள் அவரது மூளையை செல்லரித்துக் கொண்டிருந்தன. 1935-ஆம் இரண்டாவது சுற்றுப் பிரயாணத்தை தொடங்கி விட்டார். யு. எம். எஸ். ஸ்தாபனம் பெரிதும் வளர்ச்சியுற்று, மிக அதிகம் நிர்வாகப்பளு கூடியிருந்தபடியால் தான் ஒருவர் மட்டும் அதுவரை கவனித்து வந்த நிர்வாகப் பொறுப்பு களை மூன்று முக்கியஸ்தர்களின் கையில் தனித்தனியே பிரித்து ஒப்படைத்துச் சென்றூர். வெள்ளைக்கார இஞ் சினீயர் ஒருவர் டிராபிக் மானேஜராகவும், சென்னை சர்க்காரில் ஜில்லா அதிகாரியாய் வேலை பார்த்த மற்றொரு வர் ஜெனரல் மானேஜராகவும், சீப் காஷியர்—மற்றும் தன் சொந்தப் பிரதிநிதியாய் முக்கிய காரியங்களைக் கவனிக்க

பொள்ளாச்சி நகர சபை சேர்மன் ராவ்பகதூர். எஸ். வி. வி. நாயுடு அவர்களையும் நியமித்தார். ஆனால் முன் தடவை போலன்றி, பிரயாண திட்டங்களை நன்கு நிச்சயப்படுத்திக் கொண்டும், பிரயாணக் காட்சிகள் வீணாய் போய் விடாம லிருக்க இரண்டு பெரிய போட்டோ காமிராக்களையும் உடன் எடுத்துச் சென்றார். ஒன்று 16 m. m. சலனப் படம் (Movie) எடுக்கும். மற்றொன்று நிலைப்படம் (Still) எடுக்கக்கூடியது. இதோடு மேனாட்டு அரசாங்க அலுவல் முறைகளையும் நேரில் கவனித்து அறிந்து கொள்ளுவ தென்ற ஒரு திட்டமும் அவரிடமிருந்தது.

எனவே அவர் லண்டன் சேர்ந்ததும் உலகில் பிரபல மாய் பேசப்படும் பிரிட்டிஷ் தபால் இலாகா திறமையைச் சோதிப்பதற்காக 'ஜி. டி. நாயுடு லண்டன் W. C. I.' என்று தனக்குத்தானே விலாசமிட்டு ஒரு கடிதத்தை தபால் பெட்டியொன்றில் போட்டார். குறித்த நாள், குறித்த நேரத்தில் அது அவர் கைக்குக் கிட்டிவிட்டது. இதேபோல் தனது காமிராவை (Movie Camera) எங்கோ தவற விட்டுவிட்டார். ஆனால் இழந்த பொருள் காரியாலயம் (Lost Property Office) சில மணி நேரத் தில் அந்தக் காமிராவை அவரிடமே கொண்டுவந்து சேர்த்துவிட்டது. மற்றொரு சமயம் இந்தியாவிலுள்ள தன் கம்பெனி தலைமை நிர்வாகிக்கு டிரங் டெலிபோன் செய்ய விரும்பினார். ஐந்து நிமிடத்திற்கு உரிய கட்டணம் அவரிடம் வசூலிக்கப்பட்டது. ஆனால் மூன்றே நிமிடத் தில் பேச்சு முடிய, இரண்டு நிமிடத்திற்கான தொகையை நாயுடு தன்னிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டினார். 2 பவுன் திரும்பக் கிடைக்க, டெலிபோன் தொழிலாளர் திறமையைப் பாராட்டும் அறிகுறியாக அவர்கள் சகாய நிதிக்கு இதை உடனே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

லண்டன் அனுபவங்களைவிட ஜெர்மனியில் திரு. நாயுடுவுக்கு பலவிதமான அனுபவங்கள் கிடைத்தன. பிரபலமான டோம் ஓட்டலில் (Dom Hotel) தங்கியிருந்த போது ஹிட்லர், கோயரிங், ஹெஸ், கோயபெல்ஸ் போன்ற நாஸித் தலைவர்களை சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் பெற்றார். ஹிட்லருக்கும் நாயுடுவுக்கும் மத்தியில் டாக்டர் லே (Dr. Ley) மொழிபெயர்ப்பாளராயிருந்தார். தன் காமிராமுன் இவர்களை நிற்கச்செய்து படங்கள் பிடித்துக்கொண்டார். ஹிட்லரின் தனியான படமொன்றில் அவரது கையொப்பம் பெற்றிருப்பதும் மிகவும் பெருமைக்குரியதாகும். ஆனால் டஸ்ஸல் டோர் (Dussel Dore) என்ற இடத்தில் ஜெர்மன் ராணுவப்படை முன்னேற்றத்தை போட்டோ எடுக்கவே, எதிரி நாட்டின் உளவாளி என சந்தேகிக்கப்பட்டு நாஸி போலீசாரால் கைது செய்யப்பட்டார். சிறிது நேரத்தில் நாயுடு தமாஷாக படம் பிடிப்பவர்—அரசியல் அந்தரங்கமெதுவுமில்லையென்று அறியவே விடுதலை செய்யப்பட்டார்.

இதேபோன்று 1935ம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் அரசர் காலமானதையும், ஒலிம்பிக் கண்காட்சிக்கு பிரின்ஸ் ஆப் வேல்ஸ் இளவரசர் விஜயம் செய்த போதும் புகைப்படமெடுத்ததற்காக சில கஷ்டங்களுக்காளானார்.

தற்போதைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஸ்விட்சர்லாந்து பேடன் வீலர் (Baden Veiler) என்ற சுகவாசஸ்தலத்தில் தன் மனைவி கமலா நேருவின் சிகிச்சையின் பொருட்டு தங்கியிருக்கிறபோதும் சந்தித்துப் பேசிவிட்டு சலனப் படம் பிடித்தார். அதோடு நேருவின் லண்டன் விஜயத்தின்போது நடைபெற்ற விருந்துபசாரம்—பொதுக்கூட்டங்களையும் விடவில்லை. சுபாஷ் பாபு தலைமையில் நடந்த திரிபுரா காங்கிரசிற்கும் எப்போதும்போல் திரு. ஜி. டி. அவர்கள் சென்றிருந்தார். அது

சமயம் நேரு, நாயுடு அவர்களை சந்தித்து பழைய சம்பவங்களை நினைத்துக்கொண்டு பாராட்டினார்.

1945-ம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் (Strathmore) ஸ்டிராத்திமோர் என்ற பி. அண்டு ஓ. (P. & O. Mail Boat) கப்பலில் இந்தியாவுக்குத் திரும்பினார். இதே கப்பலில்தான் முன்பு இந்தியாவின் வைசிராயாகயிருந்த லார்டு லின்லித்கோ தம்பதிகள் வந்துகொண்டிருந்தனர். நாயுடுவும் இதர ஆறு இந்தியப் பிரயாணிகளும் இந்தியாவின் சார்பாக கப்பலிலேயே இவர்களுக்கு வரவேற்பு விருந்து நடத்தினர். நாயுடுவின் சபதப்படி இதையும் ஓர் சலனப்படச் சுருளாகப் பதிவு செய்து கொண்டார்.

மூன்றுவது பிரயாணம்

1939-ம் ஆண்டு—நான்கு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மூன்றுவது பிரயாணம் ஆரம்பமாகிவிட்டது. சென்ற தடவைகளைப் போலன்றி இத்தடவை மேனாட்டு தொழில் நுணுக்கம் பூராவும் தெரிந்து வருவதென்றும், முக்கியமாக உற்பத்தித் துறைகளில் கவனஞ் செலுத்துவதற்கான திட்டங்களையும், யந்திர சாதனங்களையும் பெற்றுத் திரும்புவதென்ற லட்சியத்தில் புறப்பட்டார். இச்சமயம் நாயுடுவைப் பிடித்துள்ள வயிற்றுவலியும் அவர் கோவையை விட்டு புறப்படுமுன்னதாகவே கிளம்பி விட்டது. எனவே நாயுடுவின் நம்பிக்கைக்குரிய டாக்டர் ராமசாமி அய்யர் அவர்களும் அவரைத் தொடர்ந்து செல்லவேண்டியதாயிற்று.

பம்பாய் துறைமுகத்தையடைந்து கப்பலில் ஏறும் சமயம் மிகவும் கொடுமையாய் வலி ஆரம்பமாகிவிட்டது. நாயுடுவின் உடல் நிலைமையை நன்கறிந்திருந்த டாக்டர் ராமசாமி அய்யர் தேவையான நல்ல மருந்துக்களைக்



சென்னை சர்க்கார் உணவு மந்திரி மாதவ மேனனும், கைத்தொழில் மந்திரி எச். சித்தாராம ரெட்டியும், 'கோபால் பாக்' கிற்கு விஜயஞ்செய்து, நாயுடுவின் சாதனைகளை கண்டு பாராட்டினர்.

கையில் வைத்திருந்தார். சமயத்திற்கேற்ற சிகிட்சை செய்யப்படவே நாயுடு குணம் பெற்ருர் என்பதைவிட, உயிர் தப்பினுர் என்பதே மிகவும் பொருந்தும். என்ருலும் நாயுடு தன் பிரயாணத் திட்ட ஒத்திவைப்பைப் பற்றி சிந்திக்கவே மறுத்துவிட்டார்.

இரண்டொரு வாரம் கப்பல் யாத்திரையை முடித்து இங்கிலாந்து கரையடைந்ததும், சென்ற உலக மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. ஜெர்மன் படைகள் போலந்துக்குள் காலடி எடுத்து வைக்கவே நாயுடுவின் கவனத்திற்கு பிரிட்டிஷ் கைத்தொழிற்சாலைகள் வேறுபாட்டையில் திரும்புவதும் தென்பட்டன. சில வாரங்களுக்குள் யுத்தக் காரிருள் பிரிட்டனின் எல்லா இடங்களிலும் சூழவே அக்டோபர் கடைசி வாரத்தில் நியூயார்க் நகரில் நடக்க விருந்த (World Fair) உலகக் காட்சியைப் பார்க்கும் பொருட்டு அமெரிக்கா புறப்பட்டுச் சென்ருர். வழக்கப் படி பிரபலமான (Commodore) கம்மோடர் என்ற ஓட்டலில் தங்கினுர். காணவேண்டிய பொருள்கள் எதையும் விட்டுவிடாமல் பார்த்து முடித்ததோடு பல ஆயிரம் அடி நீளமுள்ள சலனப் படமாகவும் அந்தக்காட்சி அனைத்தையுமே பிடித்துக் கொண்டார். சுமார் 37,000 காகிதங்களையும் சலனச் சுருள் பலவற்றையும், இங்கு இந்தி யாவிலுள்ள பல்வேறு நண்பர்கள்—பள்ளிக்கூடங்கள்—தொழிற் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பி வைத் தார். அப்படிப்பட்ட கடிதங்கள் ஒன்றில் அவர் வரைவ தாவது:—

“இங்கு மக்களெல்லோரும் மிகுந்த புத்திசாலிகளா யிருக்கிருர்கள். ரயில்கள் சேரும்—புறப்படும் நேரங்கள் எல்லா மக்களுக்குமே மிக நன்ருய்த் தெரிகிறது. ஆகை யால் லெவல்கிராஸிங் கேட்டுகளே கிடையாது. ஆயிரம் மைல்கள் அமெரிக்க ரயில்களில் பிரயாணம் செய்தாலும்

அழுக்காகாத உடைகளுடன் இறங்கலாம் ......பெட்ரோல் விலை நம் இந்திய நாணயத்திற்கு காலன் 7 அணு விலையில் இங்கு சாதாரணமாய்க் கிடைக்கிறது.

நாயுடு அவர்களை மிகவும் வருத்திக்கொண்டிருந்த வயிற்றுவலி அங்கும் கோரமாகிவிடவே பிரசித்திபெற்ற டாக்டர் புக்கார்ட் என்பவரின் ஆலோசனையின்பேரில் சிகாகோ புறப்பட்டுச் சென்று சிகிச்சை பெற்றார்.

பின் மிசௌரி (Missouri) போன்ற அமெரிக்க நகரங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு செயிண்ட் லூயி (St. Louis) யிலுள்ள பிரபல கைத்தொழிற் பள்ளியில் கல்வி பயில விரும்பினார். இங்கு குளிர் மிகக் கொடுமையானது. பூஜ்யத்திற்கும் கீழே 11 டிகிரியாய் சீதோஷ்ண நிலைமையிருந்தது. என்றாலும் இந்திய உடைகளுடன் அதிகப்படியான வாரங்கள் திரு. நாயுடு தங்கியிருந்தது இந்த இடம் ஒன்றில்தான்.

1940-ஆம் ஜனவரி-மீ மற்றொரு பிரபலமான பள்ளியான (Carter Carborater School) கார்ட்டர் கார்ப்பரேட்டர் ஸ்கூலில் தனது 49வது வயதில் தொழிற்கல்வி கற்றுக்கொள்ள விரும்பினார். அமெரிக்க தொழிற்சாலைகளிலேயே முக்கியமான இதில் ஒரு மாணவனுக்கு கல்வி கற்பிக்கும் செலவு மாதம் 200 டாலர்களாகும். இப்பள்ளியின் முதல் இந்திய மாணவரான நாயுடு ஏனைய மேனாட்டு மாணவர்களைப் பின்பற்றி மாத ஊதியம் பெறும் சந்தர்ப்பமும் கிடைத்தது. யுத்தம் காரணமாய் தாராளமாய் பணம் இந்தியாவிலிருந்து அவருக்குக் கிடைப்பதற்கில்லாதிருந்த நிலையில் இது மிகவும் பேருதவியாயிருந்தது. அச்சமயம் இந்தியாவுக்கு எழுதிய கடிதமொன்றில் "என் வாழ் நாளில் மிகக் கடுமையாக வேலை செய்துவிட்டேன். எவ்வளவு விரும்பினேனோ அவ்வளவும்

சம்பாதித்துவிட்டேன். ஆகையால் இனிமேல் சிக்கலான வேலைகளில் நான் ஈடுபடத் தேவையில்லை. இந்த எண்ணம் மிகவும் பலஹீனமாயிருக்கும் இப்போது என் உள்ளத்தில் உதயமாகிறது. உடல் நிலை சிறிது குணமடைந்தவுடன் நம் நாட்டுக்கும், இளைஞர்களுக்கும் என் ஆயுட்காலத்தில் உதவும் பொருட்டாவது இவைகளைக் கற்றுக்கொள்ளக் கிடைத்த சந்தர்பங்களை நான் இழந்துவிட முடியவில்லை'' என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் என்னதான் நாயுடு அவர்கள் தன்னை ஒரு மாணவனாகக் கருதி, அவை யடக்கமாய் நடந்துகொள்ள விரும்பினாலும். அமெரிக்க மக்கள் அவர் இந்தியாவின் கைத்தொழில் விஞ்ஞானி என்பதை யும், மிகச்சிறந்த மோட்டார் மன்னர் என்பதையும் மறந்து விடவில்லை. பொதுக்கூட்டங்கள், சொற்பொழிவுகள், பத்திரிகாசிரியர் பேட்டிகள் போன்றவை சாதாரணமாகி விட்டன. நிர்த்தாட்சண்யமாய் மனதில் தோன்றியதை பேசி விடுபவர் என்ற முறையில், அமெரிக்கர்களிடம் தான் கண்ட குணங்களைப் பாராட்டியதேபோல் குறைகளையும் பல நிகழ்ச்சிகளில் இடித்துப் பேசினார். ஒரு சமயம் "எல்லா நாடுகளுக்கும் அநேகமாய் எதிரிகள் இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவுக்கோ அளவு மீறி புகை பிடிக்கும் கெட்ட வழக்கமே மிகப் பெரிய விரோதியாயிருக்கிறது'' என்று கூறினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் அமெரிக்கப் பெண்க ளிடையே பேசுகையில் "நாகரீக சிகை அலங்காரமும் ஆடம்பர ஆடைகளும் பவுடர் தோய்ந்த வதனங்களும் வர்ணம் தீட்டிய உதடுகளும் மட்டும் ஒருக்காலும் உங்களை அழகுபடுத்தாது. ஒழுக்கமாயும், உண்மையாயும் இருப் பதாக மனதில் நீங்கள் எண்ணினால் கூட போதும். அதுவே அமெரிக்கப் பெண்களின் நிரம்பிய அழகாகும்''

என்றார். இதுபோல் நூற்றுக்கணக்கான அனுபவக் கருத்துரைகள் அவரால் அமெரிக்க நாட்டின் பல இடங்களிலும் வாரி வீசப்பட்டன.

டேவன் போர்ட் என்ற மற்றொரு நகரத்திற்கும் பிறகு சென்று அங்குள்ள பிரபலமான பிலிம் படத்திற்கான யந்திர உற்பத்தி சாலையைப் பார்த்துவிட்டு 16 m. m. காமிராவைக் கண்டுபிடித்த பிரபல விஞ்ஞானி அலக்ஸாண்டர் விக்டரையும் மற்றும் பலரையும் சந்தித்து உரையாடினார்.

ஆடம்பரமின்றி, அமைதியாக இதுவரை அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த நாயுடு அவர்கள் அமெரிக்காவின் பிரபல பத்திரிகாசிரியர்களின் கவனத்திற்கும் இலக்காக, அவரைப்பற்றிய செய்திகளை பத்திரிகைகள் பெரிதாக்க ஆரம்பித்துவிட்டன. எங்கேனும் ஓரிடத்தில் நாயுடு கொஞ்சம் வாயைத் திறந்துவிட்டால் மறு நிமிடம் அவைகள் பத்திரிகைகளில் பிரதான இடங்களை புகைப்படத்துடன் அடைத்துவிடும். ஒரு தடவை "அமெரிக்கப் பெண்களின் உயரமான குதிகளைக் கொண்ட ஜோடுகளையும், வர்ணம் பூசிய உதடுகளையும் கண்ட பிரபல இந்திய தொழில் விஞ்ஞானியின் கண்டனம்" என்ற ஓர் செய்தி மிகவும் பரபரப்புடன் முக்கியமாக எல்லா அமெரிக்க பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

இந்தச் சமயம், அமெரிக்காவையும் யுத்த காரிருள் நெருங்கும் அறிகுறிகள் கண்ணில் தென்பட்டன. இந்தியாவிலிருந்து முக்கிய காரியங்களுக்கும் பணம் கிடைப்பது அவருக்கு மிகக் கஷ்டமாயின. வயிற்றுவலியும் அதன் தொல்லையைக் குறைத்துக்கொள்ள மறுத்துவிட்டது. சுமார் 10000 டாலர்கள் மதிப்புக்கு யந்திரங்களுக்கு ஆர்டர் கொடுத்ததற்கு மேல் தன் விருப்பதற்கு

அதிகமாய் எதையும் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் வெறும் காலப்போக்காக சுற்றிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று தோன்றவே, அப்போது அங்கு இந்தியாவின் வர்த்தக கமிஷனராயிருந்த எச். எஸ். மலீக் என்பவரைச் சந்தித்து விமோசனம் உண்டா என்று விவாதித்தார். இந்தியா திரும்பும் செலவுக்கு மட்டும் வேண்டுமானால் ஓரளவுக்கு பணம் கிடைக்கச் செய்கிறேன் என்று சொல்லி எதிர்கால அபாயங்களை நாயுடுவுக்கு எச்சரித்தார் மலீக். எனவே நாயுடு அவர்கள் தனது மூன்றாவது பிரயாணத்தை ஒருவாறு முடித்துக்கொண்டு கொழும்பு மார்க்கமாக இந்தியா வந்து சேர்ந்தார்.

ஏதோ சில விஷமிகள் நாயுடுவைப்பற்றிய பொறாமையில் சில சந்தேகமான வதந்திகளை அவர் மீது கிளப்பி விட்டிருந்தார்கள். ஆகையால் அவரின் ஏராளமான சாமான்கள், காகிதங்கள் கொச்சி துறைமுகத்தில் ஐந்து நாட்கள் சோதனை செய்யப்பட்டன. கடைசியில் ஒன்றுமில்லாதிருக்க விஷமிகள் வெட்கித் தலைகுனிய நாயுடு சுகமாய் கோவை சேர்ந்தார்.

கனவும், கொடையும்

உலகம் சுற்றிய நாயுடு அவர்கள், பல்வேறு நாடுகளிலும், தான் கண்டு கேட்ட அனுபவங்கள் துருப்பிடித்துப் போய்விட விரும்பாமல் அவைகளை செயலில் உருவாக்க விரும்பினர். இந்தியாவை ஓர் அமெரிக்காவாகவும், ஜெர்மனியாகவும், கிரேட் பிரிட்டனாகவும் கனவு கண்டார். 40 கோடி மக்களின் தேவைக்கான எல்லா நவீன சாமான்களையுமே இந்தியாவில் உற்பத்தி செய்து விடலாமென்று திட்டங்கள் பல போட்டார். ஆர்வமிகுதியில் முன் நிகழ்ச்சிகளைக் கூட மறந்து 1941-ம் வருடம் மார்ச்சு மாதத்தில், அச்சமயம் இந்திய சர்க்கார் சப்ளை மந்திரியாயிருந்த சர். எ. ராமசாமி முதலியார் அவர்களுக்கு ஓர்



இந்திய சர்க்கார் மாஜி நிதி மந்திரி சர். ஷண்முகம் செட்டியார் திரு. நாயுடு அவர்களின்
தொழிற்சாலையை பார்வையிட்டபோது ஒரு காட்சி.

கடிதம் எழுதினர். அதாவது எழுபது ரூபாய் விலையில் மாதம் ஒன்றுக்கு 300 ரேடியோ பெட்டிகளை உற்பத்தி செய்ய விரும்புவதாகவும், இதற்கான வசதிகளை இந்திய சர்க்கார் செய்து தரவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். யுத்த நிலைமையைக் காரணம் காட்டி, சில நாட்களுக்குப் பின் இதுவும் மறுக்கப்பட்டுவிட்டது.

எனவே, தென்னிந்தியர் ஒருவர், ஆட்சிப்பீட உச்சியில் அமர்ந்திருந்தும் தன் கோரிக்கை நிறைவேற முடியாது போனதை உணர நேரிட்ட நாயுடு அவர்கள் மிகவும் மனம் வெதும்பினர். ஏதோ திரைமறைவில் தன் முயற்சிகள் வெற்றியுருவண்ணம் 'சதி' இருப்பதாகவும் சந்தேகித்தார். என்ருலும் தன் அனுபவங்களும், ஆராய்ச்சி உண்மைகளும் நாட்டுக்கும்; இளைஞர்களுக்கும் பலனின்றி காலம் கொலை செய்யப்படுகிறதே என்று வேதனை அனுபவித்ததைத் தவிர அவருக்கு ஆறுதல் பெற வேறு மார்க்கம் தோன்றவில்லை. உற்பத்தி தொழிற்சாலைகள் நிறுவுவதன் நிமித்தம் தன் சுற்றுப் பிரயாண காலங்களில் ஆர்டர் கொடுத்து தருவிக்கப்பட்டிருந்த யந்திர சாதனங்கள் தவிர்த்து கையிருப்பு செல்வம், ஏழை மக்களுக்காகவாவது பயன்பட, பல்வேறு ஸ்தாபனங்களுக்கும் யுத்தத்திலீடுபட்டிருந்த சர்க்காருக்கும் ஓர் நாள் பெரும் கொடைகள் வழங்க ஆயத்தமானர். 1943-ம் ஆண்டு சென்னை கவர்னராயிருந்த சர். ஆர்தர் ஹோப் அவர்களை கோவைக்கு அழைத்து 1,10,000 ரூபாயை யுத்த உதவி நிதிக்காகவும், 10,00,000 ரூபாய்கள் யுத்தக்கடன் பத்திரங்களுக்காகவும், அளித்தார். இதே சமயம் 1,50,000 ரூபாய் யு. எம் எஸ். ஸ்தாபன தொழிலாளர் கஷ்ட நிவாரணம் பொருட்டும், 1,00,000 ரூபாய் மாகாண தொழிலாளர் க்ஷேமாபிவிருத்திக்காகவும், 50,000 ரூபாய் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் முன்னேற்றத்திற்காகவும், 50,000 ரூபாய் பிற்பட்ட மக்களின் நிலை

உயர்த்தும் கொள்கைக்காகவென்றே தோற்றுவிக்கப்படும் பத்திரிகைகளுக்காகவும், 2,00,000 ரூபாய் ரேடியோ—மோட்டார் தொழிலபிவிருத்திக்காகவும், 50,000 ரூபாய் போலீஸ்காரர்கள் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காகவும், 25,000 ரூபாய் சென்னை பச்சையப்பன் கல்லூரி ரேடியோ பாடப்பிரிவுக்காகவும், 25,000 ரூபாய் ராமகிருஷ்ண மெஷின் மோட்டார் பாட வகுப்பு மாணவர்கள் சம்பள உதவிக்காகவும் பல லட்ச ரூபாய்களை மனமுவந்தளித்தார். இதே போல வலது கையால் கொடுப்பது இடது கைக்குக் தெரியக்கூடாது என்ற நீதியை அனுசரித்து மற்றும் பல கொடைகளையும் பெருந்துகை வழங்கினார். இப் போதுதான், நாயுடு அவர்களின் மன வேதனைக்கு ஓர் ஆறுதல் கிடைத்தது போலும்!

வாழ்வில் வெறுப்பு

மேலும் மாதங்கள் பல கழிந்தன. ஒன்றும் சரியாக விளங்கவில்லை. லட்சக்கணக்கான ரூபாய்கள் வருமானம் உள்ள பல்வேறு ஸ்தாபனப் பொறுப்புகளும் அவருக்கு அலட்சியமாகப்பட்டன. 1945-ம் ஆண்டு ஆரம்பத்தில் தான் சம்பந்தப்பட்டிருந்த முக்கிய ஏழு கம்பெனிகள் நிர்வாகத்திலிருந்தும், தன்னை விடுதலை செய்துகொண்டார். தன் பங்குகளையும் விற்பனை செய்யவே மேலும் ஏராள செல்வம் அவரிடம் அடைக்கலம் புகுந்தன. திரு. நாயுடு அவர்களின் போக்கு பலருக்கு திகைப்பையூட்டின.

வருமானவரி தொல்லை

1945-ம் ஆண்டின் இடைக்காலம் சேலத்திலிருந்த வருமான வரி அதிகாரி ஒருவர், கோவைக்கு மாற்றப்பட்டு வந்தார். 'நவ் பீல்டு பிரபு' என்றும், மற்றும் பல்வேறு 'தொழில் மன்னர்' 'மேதை' 'விஞ்ஞானி' என்றும் கேள்வி யுற்றிருந்த, திரு. நாயுடு அவர்களின் கணக்குப் புத்தகங்

களைப் புரட்டிப் பார்த்து ஏதோ தன் மதிப்புக்கு என்று காரணம் குறிப்பிட்டு '24 லட்ச ரூபாய்கள் வருமானவரி கட்டவேண்டும்' என்று நாயுடுவுக்கு நோட்டீஸ் கொடுத்தார். 1946 வருடம் மார்ச்சு மாதம் வரை ஆண்டொன்றுக்கு $2\frac{1}{2}$ லட்ச ரூபாய்கள் சரிவர வருமானவரி கொடுத்துக் கொண்டு வந்த நாயுடு, 'இது அநீதி–அக்ரமம்' என்று இந்திய சர்க்காரிடம் முறையிட்டார். ஆகஸ்ட் மாதத்தில் 'தாங்கள் ஒன்றும் செய்ய இயலாது' என்று கூறிவிட்டனர்.

"என்னுடைய கம்பெனிகளில் பிரயாணிகள் டிக்கெட் மிஷின் மூலமே விற்கப்படுகிறது. அதில் கூட்டிக் குறைத்து எழுதிக் கொள்ள முடியாது.

1941-ம் ஆண்டு முதல் 1946-ம் வருடம் வரை சுமார் 6 வருடங்களுக்கு 15 லட்ச ரூபாய் (இதர வரிகள் நீங்கலாக) வருமான வரியாக மட்டும் கொடுத்திருக்கிறேன். இதன்றி 25 லட்ச ரூபாய் என்னிடம் மேலும் கேட்பதாயிருந்தால் ஏதாவது நியாயமிருக்க வேண்டாமா?...

மேலேகண்ட 6 ஆண்டு காலத்தில் மற்ற மோட்டார் கம்பெனிகளின் சராசரி லாபக் கணக்கு ஒன்றை எடுங்கள். அதனை யொட்டி சற்று கூட்டி வேண்டுமானாலும் எனக்கு வரித்தொகை கணக்கிடுங்கள்......

குறிப்பிட்ட இந்த அதிகாரியை விட்டு, வேறு நியாய ஸ்தலத்திற்கு வேண்டுமானாலும் என் வழக்கை ஒப்படையுங்கள். விசாரித்துத் தீர்ப்புக் கூறட்டும்" என்று சாம பேத முறைகளை அனுஷ்டித்து தர்மம்–நீதி வேண்டினார். பலனில்லை.

'நாயுடு உடனே 35 லட்சரூபாய் கட்டியாகவேண்டும். இல்லாவிட்டால் அவரின் ஜங்கம சொத்துக்கள் ஜப்தி' என்று சர்க்கார் பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். "இம்பீரியல் பாங்க் அல்லது சர்க்கார் விரும்பும் எந்த பாங்கியையாவது எனக்காக ஜாமீன் ஏற்றுக் கொள்ளச் செய்கிறேன். ஜப்தியை நிறுத்தி நீதி வழங்குங்கள்" என்று மேலும் கெஞ்சினர். வருமான வரி இலாகா மறுத்துவிட்டது. 23—7—48-ம் தேதி சுமார் 200-க்கு மேற்பட்ட மிக உயர்ந்த சாமான்கள் அவரின் ஆட்டோ மோபைல் கார், பவுண்டன் பேனு உட்பட சாதாரண ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒருவரால் ஜப்தி செய்து எடுத்துச்செல்லப்பட்டது. 18—8—48-ம் தேதி 162 சாமான்கள் கோவை தாலூகா ஆபீசில் பகிரங்க ஏலம் விடப்பட்டது.

நாயுடு என்ன செய்வார்? தன்னுடைய சாதனைகளை உணர்வாரில்லை. பல உற்பத்தித் திட்டங்கள் நாசப்படுத்தப் பட்டுவிட்டன. சிறிய காரியங்களிலும் அரசாங்க நடவடிக்கைகள் இடையூறு விளைவிப்பதாயிருக்கின்றன. இளைஞர்களுக்கேனும் சொல்லி வைத்து விட்டு ஆறுதல் பெற்று மடியலாம் என்ற நிலைமையில் வருமானவரி பேராலும் எஞ்சிய தன் வாழ்நாளும், அடியோடு தன்னை அழித் தொழிக்கும் முயற்சியாய் காணவே தன் போக்கை முழுதும் தலைகீழாக மாற்றிக்கொள்ள வேண்டியவரானர். அதாவது அரசாங்கம் தன்னை அறியத் தவறிவிட்டது மட்டுமின்றி நீதிக்கு மண்டியிட்டும் 'இல்லை' என்று கை விரித்து விட்டதல்லவா? தாமும் இனி 'இல்லை' என்பதே முடிவான முடிவென முடிவு கட்டிக்கொண்டார்!

முதலை வாயில் நாயுடு

அரசாங்கத்திற்கும், நாயுடு அவர்களுக்கும் இவ்வாறு ஓர் பெரிய சர்ச்சை தோன்றிவிட்டது. அவரின் வீடு,

வாசல், மனை, தோட்டங்களுக்கும் வரித்தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன. 'வருமானவரி, முதலை வாயில் அகப்பட்டு நிற்கிறேன். அதன் வயிற்றுக்குள் முழுதும் சென்று ஜீரணமாகி விடுவேனோ அல்லது வெளியே வாந்தி எடுக்கப்பட்டு தப்பிப்பேனோ தெரியவில்லை. என் தேசத்திலுள்ள ஏழை பாட்டாளி மக்களுக்குத்தான் என்னுடைய சொத்தெல்லாம் சேரவேண்டுமே ஒழிய ஒரு குற்றமும் செய்யாத என்னை, கழுத்தைத் திருகி பழி வாங்க நினைக்கும் .... ஒரு பைசா கூட கொடுக்கமாட்டேன்' என்று 'விதியின் விளையாட்டை' மிக 'வேடிக்கை'யாக அனுபவித்துக்கொண்டே கூறுகிறார் நாயுடு.

நீதியைத்தேடி....!

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கலங்கல் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன். படிப்படியாய் வாழ்க்கையில் முன்னேறி இந்தியாவின் நவ்பீல்டு பிரபு-கொடைவள்ளல்-ஆராய்ச்சி அரசன்-யந்திர மேதை-கண்டுபிடிப்பாளர்-தாவர விஞ்ஞானி, தென்னிந்தியாவின் மோட்டார் மன்னர் என்றெல்லாம் அடையப் பெறும் பெறும் பேறு பெற்றார். 'சர்' பட்டமும் அவருக்கு மிக அலட்சியமாய்--ஆடம்பரச் சின்னமாய்த் தோன்றி மறுத்து விட்டார். தனது 59 வது வயதில் இந்நாட்டு இளைஞர் உலகம் கிடைக்கப்பெறு பேராசிரியராய் கிடைத்து ஆசானாகவும் அரும்பணி புரிகிறார். தனக்கென வாழா பிறர்க்குரியராய் வாழும் அவரின் விலை மதிப்பற்ற யந்திர சாமான்கள் அழிந்தால் அது யாருக்கு நஷ்டம் ?

பத்தாண்டுகட்கு முன்னரே பல லட்சம் மதிப்புள்ள தன் மோட்டார் ஸ்தாபனத்தை பொதுப் பணிக்குத்தந்து விடவலிய விண்ணப்பம் போட்டவர்—50 லட்ச ரூபாய்களை அளக்காமல் நல்ல காரியங்களுக்கு அள்ளிச் செலவிட்டவர்-வருமான வரியை ஏன் மோசம் செய்யவேண்டும் ? என்ற

சிந்தனை சிறிது வேலை செய்தால் இருபதாம் நூற்றாண்டின் இந்த அனுபவ விஞ்ஞானி மிச்சமாகலாம். அவர் அறிவும், திறனும் பல்லாயிரக்கணக்கான நம் மக்களுக்கு எதிர் காலத்தில் நிச்சயம் பிரதிப் பயன்தரும்.

1944-ம் வருடம்—குபேர வாழ்வில், தன் புதல்வி சரோஜினிக்கு 'குசேலத் திருமணம்' செய்யத் துணிந்த 'துறவி'க்கு இனி வாழ்வில் என்னவேண்டும்? அவரின் ஒரே புதல்வன் திரு. ஜி. டி. ராஜகோபால்! ஐந்தணு செலவில் அன்று என் ஒரு நாள் ஜீவனம் தீரவில்லையா? என்று நினைவிறுத்திக் கேட்கும் நாயுடு, இனி எதற்காகக் கவலைப் படப்போகிறார்?

'இந்த நாடு கொடுத்துவைக்கவில்லை. நாமும் உபயோகப்படமுடியாமல்—நம்மையும் உபயோகப்படுத்திக் கொள்ளத் தவறி எதிர்காலம் வீணுப் அழிக்கப்படுகிறது' என்ற ஒரே எண்ணம்...அரசாங்க நடவடிக்கைகள் எதுவும் இப்போது அவருக்கு மிகச் சாதாரணமாகிவிட்டது. ஒரு பக்கம் அவரின் விலைமதிப்பற்ற அரியபொருள்களை தாலூகா ஆபீஸ் உத்தியோகஸ்த்தர்கள் ஜப்தி செய்துகொண்டிருப்பர்— மற்றொருபுரம் தேனீர் விருந்தும் பிரசங்கங்களும் நடந்துகொண்டிருக்கும். பிறிதொருபுரம் யந்திரக் காட்சி...பாடபோதனைகள்...நண்பர்கள் விசாரணை என்பதாக அவரின் அரிய வாழ்நாட்கள் பறந்துகொண்டிருக்கின்றன.

என்றாலும், இந்த நாட்டைப்பற்றிய எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்துவிடாமல் நீதியைத் தேடிக்கொண்டிருக்கிறார் நாயுடு! அவருக்குக் கிடைக்குமா? 'அவசியம் கிடைக்கவேண்டும்; கிடைத்துத்தானாகவேண்டும்' என்று இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் இதயமும் விரும்புகிறது' வேண்டுகிறது இமயத்தை நோக்கி!!

திராவிடமணி பதிப்பகம் தெப்பக்குளம்.

திருச்சிராப்பள்ளி

தயாராகிறது புதிய வெளியீடுகள் !

1. விஞ்ஞானி ஜி. டி. நாயுடு

தொகுப்பு நூல்—அறிஞர் பலர் கருத்துரைகள்.

2. வள்ளுவர் காமம்

காமத்துப்பால் 12 குறளுக்கு விரிவுரை.

3. திராவிட மொழிகள்

புலவர் எஸ். இலக்குவன் எம். ஓ எல்.

Wrapper Printed At the Shivaji Printing Works, Tiruchi.